# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னாகம், சர்வதாரி தை கஎ (காந்தி ஆண்டு 80) 30-1-'49, ஞாயிறு | இதழ் 26

பயிற்சிமூலம்
பாஷைத் தேர்ச்சி

ஸ்ரீமதி இரத்தினம் செல்லையா,
(M. A., M. LITT.)

பாடசாலை மாணவர்களின் உபயோகத்துக் கேற்றவிதமாக வித்தியாதரிசினி ஸ்ரீமதி இரத்தினம் செல்லையா அவர்களால் உகந்தமுறையில் எழுதப்பட்டது. சிறந்த வசனப் பகுதிகளையும், திருக்குறள், நீதிநெறிவிளக்கம், பாரதிபாடல் முதலியவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பெற்ற செய்யுள்களையும் கொண்டது.

விலை ரூ. 1-75 தபாற்செலவு வேறு.

தனலக்குமி புத்தகசாலை : சுன்னாகம்

# ஓராண்டுச் சுதந்திரம்

## இலங்கைமக்கள் குதூகலம்

**ஓராண்டு எப்படிப் பறந்து சென்றதென்பது தானும் தெரியவில்லை. 1948-ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 4-ந் திகதி இலங்கையிலே சுதந்திரம் உதயமாயிற்று.**

**இவ்வாண்டு அதே தினத்தில் இலங்கை மக்கள் ஓராண்டுப் பூர்த்தி விழாவைக் கொண்டாடுகின்றனர்.**

இலங்கையின் சரித்திரத்தில் இத்தினம் மகத்துவம் வாய்ந்ததொன்று. 500 வருடகாலமாக அந்நியரின் ஆட்சியிற் கட்டுண்டு கிடந்த இலங்கை இச்சுபதினத்திற் சுதந்திரப்பாதையில் அடியெடுத்து வைத்தது.

இலங்கை, இப் பெரும் பேற்றினை இரத்தம் சிந்தாது, கலகத் தீ மூட்டாது பெற்றிருக்கின்றதெனப் பிரித்தானியர் உட்படப் பல்வேறு நாட்டினரும் இன்றுந்தான் கூறி வருகின்றனர்.

இலங்கை விடுதலையடைந்திருப்பதையிட்டு மக்கள் குதூகலமடையும்போது, இத்தகைய ஒருநிலைக்கு நாட்டைப் பக்குவம் செய்துவைத்த இலங்கைப் பெரியார்களையும் நினைவுகூர வேண்டியவர்களாகின்றனர். சாதி மத பேதமின்றிச் சகல மக்களின் மதிப்பையும் கௌரவத்தையும் பெற்ற தலைவர்கள் பலர் சிங்களர்களிடையேயும், தமிழர்களிடையேயும் வாழ்ந்து வந்தனர். சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணசலம், சேர் ஜேம்ஸ் பீரிஸ், சேர் பாரன் ஜயத்திலகா போன்றவர்கள் இலங்கையின் சுதந்திரத்துக்காக எத்தனையோ வழிகளிற் சேவை செய்து சென்றனர்.

இன்று இலங்கையின் பிரதம மந்திரியாக விளங்கும் ஸ்ரீ டி. எஸ். சேனநாயகா இலங்கையின் சுதந்திரத்துடன் பெரிதும் தொடர்புகொண்டவர். அவரும் அவருடைய சகாக்களும் உயிருடன் இருக்கும் காலத்தில் இலங்கையானது பிரிட்டனின் ஆதிக்கத்தினின்றும் விலகிக்கொண்டது. இது அவர்கள்செய்த பாக்கியமேயாகும்.

சிங்கள மக்கள் ஸ்ரீ சேனநாயகாவைச் சுதந்திர இலங்கையின் சிற்பியெனவும், **நாட்டின் தந்தை**யெனவும் போற்றுகின்றனர். இதை யேற்கச் சிலர் தயங்கினாலும் ஸ்ரீ சேனநாயகா இனறு வெற்றி வீரனகத் தொண்டாற்றியே வருகின்றார்.

சுதந்திரம், இந்நாட்டில் உதயமானபோது அதைப் போலிச் சுதந்திரம் என்று கூறி எள்ளி நகையாடிய எத்தனையோ தலைவர்கள் இன்று ஸ்ரீ சேனநாயகாவின் அபிமானத்தையும் அன்பையும் பெற்றிருக்கின்றனர். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர்கூட இன்று ஸ்ரீ சேனநாயகாவின் மந்திரி சபையில் இடம் பெற்றிருப்பதுமன்றிச் சிங்கள மக்களின் ஆசீர்வாதத்தையும் பெற்றிருக்கின்றார். ஆகவே, ஓராண்டு முடிவதற்கு முன்னதாகவே ஸ்ரீ சேனநாயகா தமிழர்கள் சிலரின் ஒத்துழைப்பையும் பெற்றுவிட்டார். இது அவர் ஈட்டிவரும் மாபெரும் வெற்றிகளில் ஒன்றாகும்.

சுதந்திரம்பெற்றுள்ள நாடுகளையே உலகம் கௌரவித்து வருகின்றது. ஆகவே இலங்கையுடன் தொடர்பு வைத்துக் கொள்வதற்காக வெளிநாடுகள் இன்று பெரிதும் விரும்பி வருவதுமன்றி, எத்தனையோ பல மகாநாடுகளிலும் இலங்கை பங்குபற்றியும் வருகின்றது.

(தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க)





[இலங்கைப் பிரதமர்]

## அஞ்சலி செய்கிறோம்



அடிமைத் தளைகளின் அற்ப சுகத்தை எண்ணி அகமகிழ்ந்திருக்கும்வேளையிலே, மகாத்மா காந்தி நம்மைக்கண்டு கண்ணீர் சொரிந்து கொண்டே வந்தார்.

சுதந்திரத்தின் சுவையை அனுபவித்த பின்னர், அதை இழந்துவிடக்கூடாதேயென நாம் கலங்கிக்கொண்டிருக்கும்போது காந்திஜி சிரித்துக்கொண்டே போய்விட்டார்.

— டொக்டர் பட்டாபி

# வெற்றிகண்ட டில்லி

## கூட்டநடபடி ஒலி பரப்பப்படுமா?

27-1-49

டில்லி மகாநாட்டுக்குச் சென்ற மந்திரி பண்டாரநாயகா மிகுந்த திருப்தியுடன் ஊர் திரும்பியிருக்கின்றார். ஐக்கிய நாடுகள் சங்கத்தின் பாதுகாப்புச் சபைக்கு மகாநாடு சமர்ப்பித்துள்ள நிர்ணயம், ஆசிய மக்களின் தீர்க்காலோசனைக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும் என்பதற்கு ஆட்சேபமில்லை.

பிரதமர்நேரு மகாநாட்டு நிகழ்ச்சிகளை மிக்க சாவதானததுடனும்; திறமையுடனும் நடாத்தி வைத்தாரெனக் கூறி, மந்திரி பண்டாரநாயகா நேருஜியின் உதார குணத்தைப் பெரிதும் பாராட்டியிருக்கின்றார். இராஜதந்திர நிபுணர்கள் வரிசையில் நேருஜி முக்கிய ஸ்தானம் வகிக்கின்றார் என்பது டில்லிமகாநாட்டு நடபடியிலிருந்து உலகு அறிய முடிகின்றது.

### சுதந்திரவிழா

பெப்பிரவரி 4-ந்வ இலங்கைக்குச் சுதந்திர தினமாகும். இதை மிகச் சிறந்தமுறையிற் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன. இத்தினத்தை முன்னிட்டுப் பெரியபந்தய ஓட்டம் ஒன்று 2-ந் திகதி பருத்தித்துறையிலும்மட்டக்களப்பிலும் ஆரம்பமாகின்றது. தென்னிலங்கையில் தேவாந்துறை முனையிலிருந்து 3-ந் திகதி ஆரம்பமாகும். கொழும்பிலே காலிமுக மைதானத்தில் ஆரம்பமாகும். இப்பெரிய ஓட்டத்தில் 1,600 வாலிபர்கள் பங்குபற்றுவார்கள் எனவும், இவர்கள் 650 மைல் தூரத்தை ஓடி முடிப்பார்கள் எனவுந் தெரிகின்றது. இது நூதனமான ஒரு பந்தய ஓட்டமன்று. ஏனெனின் அந்தக் காலததில் யவனர்களும் 'மாதன்' என்று சொல்லப்படும் இத்தகைய ஓட்டங்களில் ஈடுபட்டுவந்தனர். நிதிமந்திரி ஜயவர்த்தன அவர்களுக்குத்தான் இந்த நவமான யோசனை உதித்தது. இதிற் பங்கு பற்றுபவர்கள் தலைக்கு அரை மைல் தூரந்தான் ஓடுவார்கள். இதற்கான சகல ஒழுங்குகளையும் அவ்வப்பகுதிகளிலுள்ள அரசாங்க அதிகாரிகளும் பள்ளிக்கூட ஆசிரியர்களும் செய்வார்கள் எனத் தெரிகின்றது.

பருத்தித்துறையில் 2-ந் திகதி காலை 1-38 மணிக்கு இந்த ஓட்டம் ஆரம்பமாகும். நான்கு திசைகளிலிருந்தும் இது ஆரம்பமாகிக் கொழும்பிலே 4-ந்திகதி முடிவடையும்.

### சீமைச் சாக்கல்ல

இப்பந்தய ஓட்டத்திற் பங்குபற்றுபவர்கள் அணிவதற்கென வாள் ஏந்திய சிங்கம் பொறித்த அடையாளம் ஆயிரக்கணக்கில் தயாராகின்றது. இவற்றைச் சீமையிலே செய்து விமானமார்க்கமாக இங்கு பெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. இதிலே தாமதம் ஏற்பட்டபடியாற் குறித்த 'சிங்கம்' பொறிக்கப்பட்ட அடையாளங்களைக் கடதாசியில் இங்கு செய்துள்ளனர். இவற்றுள் 2000 அடையாள முத்திரைகள் யாழ்ப்பாணத்துக்கும், 2000 மட்டக்களப்புக்கும் அனுப்பியிருக்கின்றனர். இலங்கைச் சமாச்சாரப் பகுதியினரே இந்த வேலைகளைச் செய்து வருகின்றனர். சீமையிலுள்ள வர்த்தக நிலையம் இவற்றைச் செய்யாத காரணததாற் சமாச்சாரப் பகுதியினருக்கு இந்தத் தலையிடி ஏற்பட்டுவிட்டதே!

### காந்திஜி தினம்

சென்ற வருடம் ஜனவரி மாதம் 30.ந் திகதி அமரவாழ்வு எய்திய காந்தி அடிகளின் சிரார்த்த தினத்தைக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் இங்கும் பிறஇடங்களிலும் நடைபெறுகின்றன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி போன்ற இடங்களில் இததினம் பக்தி சிரத்தையுடன் அனுஷ்டிக்கப்படுமாம். கொழும்பிலுள்ள பத்திரிகை ஆசிரியர் ஒருவர் திருகோணமலைக் கூட்டத்திற் பங்குபற்றுவார் என அறிகின்றேன்.

இலங்கை இந்தியர் காங்கிரஸ் 30-ந் திகதி பிற்பகல் கொழும்பு நகரமண்டபத்திற் காந்திஜி தினத்தைச் கொண்டாடுகின்றது. இம்முறை பேச்சாளர்களின் வரிசையில் இ. இ. காங்கிரஸ், ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களைச் சேர்க்கவில்லை.

### மாவு நிலை

சிங்கப்பூர் அரசாங்கத்திடம் இலங்கை 7000 தொன் மாவு கடனகக் கேட்டுள்ளது. இதில் ஒரு பகுதி திங்கட்கிழமை (24-1-49) கொழும்பு வந்து சேரக் கூடும். சிட்னியை விட்டு மற்ளுேர் கப்பல் 9000 தொன் மாவுடன் புறப்பட்டுவிட்டது. இது பெப்ரவரி 15-ந் திகதி கொழும்பிலே நங்கூரம் போடுமென எதிர்பார்க்கலாம். இதற்குப் பின் வேறும் இரு கப்பல்கள் 18000 தொன் மாவுடன அநேகமாக அடுத்த மாதம் பிறபகுதியிற் கொழும்பு வந்தடையும்.

### வேலையற்ருேர் பவனி

சுதந்திரம் கிடைத்தபோதிலும் நாட்டு மக்களில் அதிக

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாயோகி

# ஆனந்த குமாரசுவாமி

முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி

(சென்றவாரத் தொடர்ச்சி)

அரசியலின் வரைவியற்சிர்ப் பேரவை*யி
னுறுப்பினரு யமர்ந்து யாரும்
பரசுபெரு காவலனுய் வாதமிட்டுப் பணிபெருக்கிப்
பயன்கள் கண்டோன்
பரிவுறவே பொதுப்பணிகள் பலப்பலவி னீடுபட்டுப்
பாரி லென்றும்
உரவுடையார் பழம்பெருமை யுறுதமிழ ரென்றுபெய
ரோங்க வைத்தோன்; 6

நோற்றபெருந் தலப்பயனுல் முருகனெமக் களித்துநின்ற
நுண்மாண் தோன்றல்
ஆற்றல்மிகப் படைப்பனெனப் பெற்றெடுத்தோர் அகமகிழ்ச்சி
அமைந்தா ராகி
எற்றமுற இனியமுத்துக் குமாரசுவா மிப்பெயரிங்
கிடுவ மென்று
மாற்றமற மகிழ்ந்துபுனை வளங்கொள்பெயர் பொருந்தநனி
வளர்ந்த மேலோன். 7

பெருமைபெற மூவாண்டு பேரிலண்டன் மாநகரிற்
பிறங்கி யான்றோர்
அருமையுற வதுகொண்டோன் ஆங்கொருசீர்ப் பெண்மடவாள்
அறிவின் பாவை
மருமலரி னெளியழகி எலிசபேத் தென்றுபெயர்
வழங்கி னுளை
உரிமைமனை யெனவேட்டுத் தாயகம்புக் குயிர்வாழ்வி
னுயர்ந்து வாழ்ந்தோன். 8

ஆன்றபெருங் கலையறிவு படைத்துயர்ந்த நாகரிக
மடைந்து பண்டைச்
சான்றவர்க ளிவரேயென் றுலகுநனி நாவசைக்குந்
தமிழர் தங்கள்
வான்றகைமை தெரித்திடுவான் வலம்புரியின் முத்தமென
மலர்ந்து தோன்றுந்
தோன்றலிங்கு வேண்டுமெனத் தொழுதனன்சீர்க் கதிரையப்பன்
துணைத்தாள் நன்றே. 9

இசைசெறியு மாயிரத்தெண் ணூற்றெழுபா னேழாமென்
றியம்பு மாண்டில்
நசைமலியு மாவணியில் நறுங்கதிரோன் பாகையெட்டில்
நடக்குங் காலை
வசைதவிர வுறவினர்கள் வாழ்த்தெடுப்ப விலங்கைமகள்
மகிழ்ச்சி கூர
அசைவறுசீர்க் குழகனெளி யதுசெறிய வொருபுதல்வ
னடைந்தான் மன்னே. 10

ஆனந்தத் திருமுருக னழகுமயின் மிசையேறி
யகில மெல்லாம்
ஆனந்தக் கூத்தியற்றி யொளிபெருக்கு மாதலினு
லவன்பேர் நன்றென்
ருனந்தக் கேக்குமா சாமியெனும் பெயர்புனைய
அறிவும் பண்பும்
ஆனந்தத் தொடுகுலவ முழுமணியா மெனவளர்ந்தா
னழகின் செல்வன் 11

ஈழவளத் தலைநகரி லிவனிளவ லெனவளா
விலங்குந் தந்தை
வாழ்வதனைத் தூய்மைசெயும் பொதுப் பணிகள்
பலபுரிந்த வண்மையானே
தாழ்வு தவிர்த் துறுதுறக்கம் தானடையத்
தாயினெடு தகைமைச்செல்வம்
சூழுமுயர் பேரிலண்டன் புகுந்து மலர்ந்
தெழிலறிவு தொடாங்கின்ருேன். 12

(தொடரும்)

*Member of Legislative Council

## மலாயாப் பிரயாணிகளுக்கு:

யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியா வழியாக மலாயாவுக்குப் பிரயாணஞ்செய்வோர் கவனிக்க வேண்டியனபற்றி குவாலலம்பூர் வைத்திய ஆராய்ச்சிநிலையத்து திரு. வே. தம்பு அவர்கள் எழுதுவதாவது:

1. கப்பற்சீட்டு இல்லாமல் இந்தியாவிலே தங்கிப் பிரயாணஞ் செய்வதால் அடையும் வீண் செலவு, வசதியீனம் துன்பம் என்பன பற்றி யாவரும் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

2. யாழ்ப்பாணத்தி லிருந்து புறப்படுமுன்னர் கப்பற்சீட்டு இருக்கிறதா என்பதைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டுதான் பிரயாணஞ் செய்யவேண்டும்.

3. எப்படியும் யாழ்ப்பாணத்தை விட்டுப் புகைவண்டியில் ஏறிவிட்டால் எவ்வளவு துன்பத்தையும் செலவையும் அடைந்தாலும் மலாயா போய்ச் சேர்ந்துவிடலாம் என்ற மனப்பான்மைஇருக்கக்கூடாது.

4. இந்தியா வழியாற் செல்வதால் ஏற்படும் கஷ்டம், துன்பம், கப்பல் வசதியீனம் இவைகளைப்பற்றி யாவரும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

5. பணம் சிறிது கூடுதலாகக் கொடுத்தாலும் அவசியம் வேண்டிய வசதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சிறந்தபலனுக்கு

C. C. C. புகையிலைப்பசளை

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும்போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

C. C. C.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி
லிமிற்றெட்

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றியவிபரங்களுக்கு உடனே எழுதவும்.

The
Colombo
Commercial
Company
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

(3577)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தையின் தியாகவாழ்வு

## கவியரசி காணிக்கை

**தமது வாழ்க்கையின்** மூலமாகவும், ஒழுக்கத்தின் மூலமாகவும், தியாகத்தின் மூலமாகவும், அன்பு வலிமை விசுவாசம் என்பவற்றின் மூலமாகவும் எமக்குப் போதனை செய்துவந்த பாபுஜி இறந்தலென்பது எங்ஙனம் சாலும்! அந்தச் சிறிய பெலவீனமான வறிய மனிதர், தன்னுடம்பைப் போர்த்து மூடிக்கொள்வதற்குத்தானும் போதியளவு ஆடையற்றவர். ஓர் ஊசி போடுவதற்கான அற்ப நிலத்துக்கேனும் இப் பரந்த உலகில் உரிமையற்றவர். இவ்வுலகிலுள்ள கொடிய சக்திகளினும் மேம்பட்ட ஆற்றலும், சக்கராதிபத்தியங்களினும் சிறந்த வல்லமையும், போர் புரிந்த படைகளினும் மேலான சக்தியு முடையவரா யிருந்தது எவ்வாறு? குழந்தைபோன்ற உடம்பையுடைய, சின்னஞ்சிறிய இம்மனிதர், சந்நியாசி—மற்றுமேழைகளுடன் ஒருமித்து இன்பகரமாய் வாழ்வதற்காகத் தானே விழைந்து பட்டினியை மேற்கொண்டு வாழுமொருவர், சக்கரவர்த்திகள்தாமும் அனுபவித்திராத வகையில், உலகமனைத்திலும் தன்னை மதித்தோரிடமும் வெறுத்தோரிடமும் இவ்விதமான செல்வாக்கைப் பெற்றிருந்தது எங்ஙனம்?

இவையனைத்துக்கும் காரணம் அவர் வெறும் ஆடம்பரமான புகழையோ அன்றி நிந்தனையையோ பொருட்படுத்தாமையே. அறநெறியொன்றையே அவர் பொருட்படுத்தினர்; தான் உபதேசித்து அநுட்டானத்திற் கொண்டுவந்த கொள்கைகள்மீதே அவர் தம் கவனத்தைச் செலுத்தினர். மனிதருடைய பேராசையினாலும் கொடுமையினாலும் பேராபத்துகள் நேரிட்டபோதிலும், ரணகளத்தில் வாடிய பூக்கள்போலவும், சருகுகள்போலவும் உலகில் ஆபாசம் நிறைந்திருந்தபோதும், அஹிம்சையில் அவர் வைத்திருந்த நம்பிக்கை சற்றும் தளரவில்லை. உலக முழுதுமே அழிந்தொழியினும், இரத்த வெள்ளத்தில் அது தவழ்ந்தாலும், அவ்வுலகின் புதிய நாகரிகத்துக்கு நிலையான அத்திவாரம் போன்றிருப்பது அஹிம்சையென்றும், எவன் தனது சீவியத்தைத் தேடுகிறானோ அவன் அதை இழப்பானென்றும் எவன் தன் சீவியத்தை இழக்கிறானோ அவனே அதைக் காண்பானென்றும் அவர் நம்பினர்.

**அவருடைய முதலாவது** உண்ணாவிரதம் 1924-ல் இந்து—முஸ்லிம்ஒற்றுமைக்காகவே ஆரம்பிக்கப்பட்டது. அவ்வுபவாசத்துடன் நானும் தொடர்புடையேனாயிருந்தேன். அவ்வுபவாசம் தேச முழுவதினதும் அநுதாபத்தைப் பெற்றது. அவரது கடைசி உண்ணாவிரதமும் அதே இந்து—முஸ்லிம் ஒற்றுமைக்காகவே கைப்பிடிக்கப்பட்டதெனினும், அவ்விரதத்தில் தேச முழுவதும் அநுதாபப்படவில்லை. தேசம் அவ்வளவு தூரம் பிளவுபட்டு, தேசமக்களிடையே வெறுப்பு வளர்ந்து, சந்தேகமும் துவேஷமும் அதிகரித்து, தேசத்திலுள்ள பல மதத்தவரும் தம் மதத்தினிடம் உண்மையான பற்றை இழந்துவிட்டமையால், ஒரே ஒரு பகுதியினர் மாத்திரம் மகாத்மாவைப்பற்றி விளங்கக்கூடியதாயும் அவரது உபவாசத்தின் நுண்பொருளை உணரக்கூடியதாயுமிருந்தனர். தேசமக்கள் அவரது உபவாசவிஷயத்தில் வேறுபட்ட பிரிவுடையோராயிருந்தனர் என்பது மலையிலக்கு. வேறு சமூகத்தினரல்ல, அவரது சமூகத்தினரே அவ்வுபவாசத்தின் நோக்கத்தை ஒப்புக்கொள்ளாது கடூரமாக எதிர்த்து இக் கொடிய முறையில் தமது கோபத்தையும் ஆவேசத்தையும் வெளிக்காட்டினர். இந்துமதத்தின் தத்துவத்துக்கும் கொள்கைகளுக்கும் போதனைகளுக்கும் சற்றும் முரண்பாடின்றி வாழ்ந்த இத் தனிப் பெரும் இந்துப் பெரியார், சகல இந்துக்களினும் மேம்பாடுற்றவர். இந்து ஒருவனுடைய கையினால் இறக்கவேண்டி நேர்ந்தமை இந்து சமூகத்துக்கே சம்பவித்த அபவாதமாகும்! இந்துமத உரிமைகளுக்காக ஓர் இந்துவின் கையினால் இந்துசமூகமே தனது தனிப்பொருளைத் தியாகஞ்செய்ய நேரிட்டமை, உண்மையில் இந்துமதத்தின் அழியாத ஞாபக சின்னமாகி விட்டது. ஆனால், இதனால் ஆவதொன்றுமில்லை. எங்களிற் பலருக்கு நாள்தோறும் வருடந்தோறும் இது என்றும் மறக்க முடியாத ஒரு பெருந் துயரமே. ஏனென்றால், அவருடைய வாழ்வும் எங்கள் வாழ்வும் பரஸ்பரம் ஒன்றுபட்டு விட்டன. எங்களுள் பலர் உண்மையில் அந்த நம்பிக்கையிலேயே ஆழ்ந்துவிட்டோம்; அவருடைய இறப்பினால் எங்களில் ஒருபாகமே அற்றுப் போய்விட்டது. ஏனென்றால் எங்கள் வாழ்க்கைத் தொடர்புகளும், தசைநார் நரம்பு இருதயம் இரத்தம் இவைகளனைத்தும் அவருடைய வாழ்வுடன் ஒன்றுகலந்திருந்தன.

ஆனால், செயலற்ற நிலைமைக்கு நாம் இடங்கொடுப்போமானால் அது நம்பிக்கைத் துரோகமான வஞ்சகச் செயலென்றே கருதப்படும். அவர் மறைந்துவிட்டபடியால், நிச்சயமாகவே அவர் இறந்துவிட்டார் என்றும், எல்லாவற்றையும் நாம் இழந்துவிட்டோம் என்றும் நம்பினால், அவரிடம் நாம் வைத்திருந்த அன்புக்கும் நம்பிக்கைக்கும் பலனென்ன? அவருடைய பூதவுடல் எங்களை விட்டுப் போய்விட்டபடியால் எல்லாவற்றையும் நாம் இழந்துவிட்டோம் என்று நம்பத் துணிவோமாகில் அவர்மாட்டு நாம் பக்தி கொண்டிருந்ததின் பிரயோசனந்தானென்ன? அவரது பிற்சந்ததியாரும், ஆத்மீகவழித் தோன்றல்களும், அவரது கொள்கைகளைப் பரப்ப உரிமை பூண்டோரும், அவரது கடமையைத் தொடர்ந்து செய்ய வேண்டியோரும் நாமல்லவா? தனித்து நின்று அவர் செய்ததினும் மேலாக, நாமனைவரும் ஒன்றுபட்டு முயற்சித்து, அவரது கடமையைத் தொடர்ந்து செய்து அதனை வளர்ந்து செழித்துப் பெரும் பேறுகள் நல்கும்படி செய்வது நம் கடமையல்லவா? அதனாலேயே நாம் பிரத்தியேகமாகத் துக்கமடைதற்குரிய காலம் கழிந்துவிட்டதென்றேன்.



காந்திஜி சென்ற வருடம் ஜனவரி மாதம் 30-ந் திகதி வீர சுவர்க்கமடைந்தார். அவ்வாண்டு பெப்பிரவரி மாதம் 4-ந் திகதி ஸ்ரீமதி சரோஜினிநாயுடு டில்லி வானொலியிற் பேசியபோது காந்திஜியின் வலிமை மிக்க வாழ்க்கையின் மாண்பை விளக்கி வைத்தார். இதனை ஸ்ரீ ச. ஆறுமுகராசா மொழிபெயர்த்துள்ளார். ப-ர்.

**மார்பிலறைந்து** மனத்துயர் கொள்ளுவதற்குரிய நேரம் கழிந்து விட்டது. மகாத்மா காந்தியின் கொள்கைகளை மறுத்தோரை எதிர்த்து "நாம் அப் போராட்டத்தை மேற்கொள்ளுகிறோம்" என்று நிமிர்ந்துநின்று சொல்லுவதற்குரிய நேரமே யிது. நாம் அவரது வாழ்க்கையொளியின் சின்னங்களே. அவருடைய போர்வீரரும் நாமே. யுத்தத்தில் மாண்டிருக்கும் உலகின் முன்னிலையில் அவருடைய வெற்றிக் கொடியைத் தாங்கிச் செல்வோரும் நாமே. சத்தியமே எங்கள் வெற்றிக் கொடி. அஹிம்சையே எங்கள் கேடயம். இரத்தமின்றி வெற்றிபெறும் ஆத்ம பலமே எங்கள் வாள். ஆகவே, இந்திய மக்களனைவரும் தம் கண்ணீரைத் துடைத்து எழுவார்களாக. கவலையை ஒழித்துத் தலைநிமிர்ந்து நிற்பார்களாக. நல்ல நம்பிக்கையும் முகமலர்ச்சியும் நிறைந்தோராய் உற்சாகத்துடன் விளங்குவார்களாக. அவருடைய உருத்தோற்றத்தின் ஒளியையும், அவரது ஆற்றலின் புகழையும், அவரது விழுமிய ஒழுக்கத்தின் தகைமையையும் நாம் அவரிடம் [illegible] வாங்குவோமாக. கடனாக வாங்கவேண்டிய அவசியமுமில்லை; அவையனைத்தையும் அவரே எமக்குத் தந்துள்ளார். எங்கள் தலைவரின் அடிச்சுவட்டை நாம் பின்தொடரமாட்டோமா? அவருடைய ஆக்ஞைகளுக்குத் தலைபணியோமா? அவருடைய போர்வீரராகிய நாம் அவருடைய போராட்டத்துக்கு வெற்றியீட்ட முடியாதா? மகாத்மா காந்தியின் பூரணமான உபதேசங்களை உலகுக்கு நாம் அளிக்கமாட்டோமா? அவருடைய மொழிகளை நாம் இனிக் கேட்க முடியாதாயினும், இப்போதைய உலகுக்கும் எம்முடன் வசித்தோருக்கும் மாத்திரமன்றி வருங்கால உலகுக்குங்கூட அவருடைய உபதேசங்களைக் கூறும் கோடிக்கணக்கான மொழிகள் எம்மிடம் இல்லாமற்போகுமா? அவருடைய தியாகமும் வீணே கழிவதா? வீணே துக்கிக்கும் பொருட்டுமாத்திரம் சிந்தப்படும் தகைமைத்தா அவருடைய உதிரம்? அன்றி உலகையே இரட்சிக்கும் நோக்கினையும் சமாதானப் பிரியத்தையுமுடைய அவரது போர்வீரர் படையின் சிறந்த சின்னமென்று கருதி அவருடைய இரத்தத்தை நாம் எம் நெற்றியில்திலகமாக அணிவோமா? தடுதடுத்த குரலில் நான் பேசுவதைக் கவனித்துக்கொண்டிருக்கிற இவ்வுலகின் முன்னிலையில், முப்பது வருடங்களுக்குமுன் என்னை அர்ப்பணஞ்செய்ததுபோல இன்றும் இதேசமயத்தில் நித்தியராய அம்மகாத்மாவின் திருப்பணிக்காகவே என்னையும் உங்களையும் அர்ப்பணம் செய்கின்றேன்.

**இறப்பு என்பதென்ன?** எனது சொந்தத் தந்தையார், இறப்பதற்குச் சற்று முன்தான் மரணத்தறுவாயில் இருக்கும்போதே, 'இறப்பென்பதும் பிறப்பென்பதும் யாண்டுமில்லை; ஆத்மா உண்மையின் உயர்ந்த படிகளை நாடிச் செல்வதொன்றேயுளது' என்று என்னிடம் கூறினார். சத்தியத்துக்காகவே இவ்வுலகில் வாழ்ந்த மகாத்மா காந்தியும், ஒரு கொலைஞன் கையினால், அம் மகாத்மாதானே போதித்திருந்த உண்மையின் உயர்ந்த படிக்கு மாற்றப்பட்டிருக்கிறார். அவருடைய ஸ்தானத்தை நாம் அடைய மாட்டோமா? எங்கள் அனைவருடைய வல்லமையும் ஒன்றுதிரண்டாலும் அவரது விழுமிய உபதேசத்தை உலகுக்குப் போதித்து அனுட்டிக்கச்செய்யும் சக்தியற்றதாகி விடுமோ? அவருடைய போர்வீரருள் மிகவும் அற்பமானவள் நானொருத்தி இருக்கிறேன்; என்னோடுகூட அம்மகாத்மாவின் அன்புக்குப் பாத்திரமாய ஜவஹர்லால் நேரு, அவரின் நம்பிக்கையைப் பெற்றுப் பின்தொடர்ந்துசென்றவரும் நண்பருமாய வல்லபாய்படேல், கிறிஸ்துவின் கையிலிருந்த பரி. யோவான் போன்ற இராஜேந்திரபாபு, அம்மகாத்மாவுக்குப் பாதகாணிக்கை செலுத்துவதற்காக, ஒரு கணப்பொழுதின் அறிவித்தலுடனேயே, இந்தியாவின் பலபாகங்களிலிருந்து பறந்துவந்த ஏனைய சகபாடிகள் — இன்னோரன்ன பல சிஷ்யர்கள் அவருக்கு இருக்கிறார்கள் என்பதையும் நான் அறிவேன். அவருடைய போதனையை நாமெல்லோரும் சிரமேற்கொண்டு அதனை நிறைவேற்ற வேண்டாமா? அவர் உண்ணாவிரதம் இருந்த காலங்களில் அவருக்குச் சேவைசெய்தும், ஆறுதலடையச்செய்தும், அவர் நகைக்கும்படி செய்தும் பணியாற்றிய பாக்கியம் எனக்குண்டு. ஏனென்றால் நண்பர்கள் சிரிப்பது அவருக்கோர் ஔடதம் போன்றது. அந்த நேரங்களிலெல்லாம், சேவாகிராமத்திலோ, நவகாளியிலோ அன்றி வேறொரு தூரமான இடத்திலோ மகாத்மா இறந்தால் நாமெப்படி அவரிடம் போய்ச் சேருவோம் என்றெல்லாம் நான் கற்பனை செய்வதுண்டு. ஆகவே, இவ்வரசர்களது நகரில்—புராதன ஹிந்து சாம்ராஜ்யங்களுக்கெல்லாம் இருப்பிடமாயிருந்த இவ்விடத்தில்—மொஹலாயரின் கீர்த்தி நிலைநாட்டப்பட்ட இவ்விடத்தில்—அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து அவர் மீட்டுக்கொடுத்த இந்தியஇராஜதானியில்—டெல்கிப் பட்டினத்தில் அவர் உயிர்துறந்தமை சரியானதும் மிகப்பொருத்தமானதுமாகும். அவ்வாறே மண்ணனினும் மிகச்சிறந்த மேன்மை படைத்த அவர் டில்லியிற் புதைக்கப்பட்ட பல மன்னர்களுக்கும் நடுவில் தகனஞ்செய்யப்பட்டமையும் பொருத்தமா

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

### சுதந்தர இலட்சியம்

★

— நாமக்கல் கவிஞர் —

சிந்துமெட்டு

சுதந்தரவாழ்க்கைதனைத்தொடங்கிவிட்டோம்—உண்மை
சுகம்பெற யாவருக்கும் இடங்கொடுப்போம்
மதந்தரும் வேற்றுமைகள் மறந்திடுவோம்—இந்த
மாநிலம் முழுதுக்கும் அறந்தருவோம்—(சுதந்தர)

அடிமை விலங்குகளை அறுத்துவிட்டோம்—அதில்
அன்பின் பெருமைநிலை நிறுத்திவிட்டோம்
கொடுமைசெய் போர்வெறிகள் குறைந்திடவே—சாந்த
கொள்கை பரப்புவதிற் சிறந்திடுவோம்—(சுதந்தர)

சாந்தி இழந்துழலும் மேதினிஎங்கும்—ஒரு
சந்தோஷ சேதிகொண்டு தூதுநடப்போம்
காந்தி சிறந்தவழி பணிபுரிவோம்—உலகில்
கலகம் மறைந்தொழியத் துணைதருவோம் — (சுதந்தர)

எவரும் நமக்குப்பகை உலகிலில்லை—மற்ற
எந்தெந்த நாட்டினிலும் சலுகைகொள்வோம்
தவறும் வழிநடக்கும் நாடுகளிலும்—காந்தி
தரும்நெறி பரப்பப் பாடுபடுவோம்—(சுதந்தர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன சஞ்சாரம்

## 6. நெருப்புப்பெட்டி வியாச்சியம்

ஒருநாள் மாலே நாங்கள் மூவரும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, எங்கள் கவனத்திற்கு அவ்வூரிலுள்ள ஒரு தம்பதிகளால் கொண்டு வரப்பட்ட நெருப்புப்பெட்டி சம்பந்தமான வழக்கு ஒன்று கொண்டுவரப்பட்டது.

சேவையருக்கு ஆறு சிங்கள வேலேயாட்கள் உண்டு. அவர்களுக்குச் சிறிதும் தமிழ் தெரியாது. நிலம் அளக்கும் தொழிலில் உதவி புரிவதற்காக அவர்கள் இருந்தனர். அவர்கள் இன்னெரு கூடாரத்தில் இருந்தனர். அவர்களில் ஒருவன் அவ்வூர் வீடு ஒன்றில் இரவில் புகுந்திருக்கிருன். அவ்வூரில் ஆண்கள் இரவில் வீட்டில் தங்குவதில்லே. வயற் காவலுக்குச் சென்று விடுவார்கள். சிங்கள வேலேக்காரன் சென்று வீட்டில் உள்ள பெண்களேக் கூப்பிட்டிருக்கிருன். அவள் விளக்குக் கொளுத்த நெருப்புப் பெட்டியை எடுத்திருக்கிருள். சிங்களவன் நெருப்புப் பெட்டியைப் பறித்து மடிக்குள் வைத்துக்கொண்டான். அந்த ஊரில் நெருப்புப்பெட்டி, அருமையானதும், கிடைத்தற்கருமையானது மென்று அவனுக்குத் தெரியாது. அவள் சத்தம் போட்டிருக்கிருள். சிங்களவன் நெருப்புப் பெட்டியுடன் ஓடிவிட்டான். இந்த வழக்கு அவளாலும் அவள் புருஷனுலும் எங்கள் முன்னிலேயில் கொண்டுவரப்பட்டது. அவர்களுடைய நெருப்புப்பெட்டி சிங்களவருடைய கூடாரத்தில் கண்டெடுக்கப்பட்டது. வழக்கு ருசுவாகி வருகிற சந்தர்ப்பத்தில், சற்றும் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது.

## 7. சோத்துப் போக்கன் வாழ்க

சேவையரின் வெண்தலே மத்தியில் ஒரு பயங்கரமான பிராணி பாய்ந்து வந்து இருந்து கொண்டது. சேவையர் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருக்க முயன்ருர். அப்பிராணி உடனே என்னேக் குறிபார்த்துப் பாய்ந்தது. நான போர்க்களத்தில் துரிதமாக நிற்கும போர்வீரனேப் போலக் குறி பிழைக்கும்படியாகச் சிறிது சாய்ந்து கொடுத்தேன். நான் இருந்த மூன்றுகாற் கதிரை சரிந்து விழவே நான் 'வாணு'வின் மேல் விழும் பாக்கியம் அடையப்பெற்றேன். மிகவும் தாக்கமான விழுக்காடானபடியால் உடனே எழுந்திருக்க முடியவில்லே. இந்த அமளியில் அந்தப் பயங்கரபிராணி எங்கோ மறைந்து விட்டது. சிங்களவர் போல்க் கம்பு [போல்க் கம்பென்பது வெண்ணிறமும், செந்நிறமும் மாறிமாறிப் பூசப்பட்ட நீளத்தடி; நில அளவையில் உபயோகிக்கப்படும் கருவிகளில் ஒன்று.], கத்தி, அலவாங்கு இவைகளுடன் அந்தப் பிராணியைத் தேடினர். வழக்குக் கொடுக்கவந்த மனிதன். 'அதைக் கொல்லக் கூடாதையா, அதன் பெயர் பொக்கன்' என்ருன். அவன் மனேவி, 'இல்லே; அதன் பெயர் சோத்துப் பொக்கன்; அது வீட்டினுள் இருப்பது செல்வம்' என்ருள். சோத்துப் பொக்கன் வாழ்க.

'சோத்துப் பொக்கன் என்ற' அந்தப் பயங்கர பிராணி என்ன? என்று நீங்கள் யோசிப்பீர்கள். அது ஒரு பெரிய தவளே. மிகவும் பெரிய தவளேகளே அந்த ஊரவர்கள் 'சோத்துப் பொக்கன்' என அழைக்கின்றனர்.

## 8. விவாகம் வேண்டாம்

இன்னெருநாள்; சேவையர் தனது மகள் 'விவாகம் வேண்டாம்' என்று சொல்லுகிருள்; என்று சொன்னர். இவள் எனக்கு எதிர்மறையாக இருக்கிருள். நான் 'விவாகம் வேண்டும்' என்று வெளிச்சமாகச் சொல்லுகிறவன் அல்லவா? அடிப்படை மனப்பான்மையில் இருவருக்கும் வித்தியாசம் இருக்காதென நினைக்கிறேன். இவளுடைய குட்டை வெளிப்படுத்தவேண்டுமென்று மனத்துள் நினேத்துக் கொண்டு, 'பிடிமின், பிடிமின்' என்ற கருத்தில் 'விடுமின், விடுமின்' என்று கூறும் பெண்களே விளக்கும் கலிங்கத்துப் பரணிச் செய்யுளேயும் சேவையருக்கு விளங்கப் படுத்திப் பெண்கள் பல கருத்தை மனதில் வைத்துக்கொண்டு 'விவாகம் வேண்டாமென்று சொல்லுவார்கள்' என்றேன். 'என்னென்ன கருத்தை மனதில் வைத்துக்கொண்டு விவாகம் வேண்டாம், என்று சொல்லுவார்கள்' என்று சற்று விபரமாகச் சொல்லவேண்டுமென்று கேட்டார்.

அது பாருங்கள்; ஒவ்வொருவர் விஷயத்தில் ஒவ்வொரு வகையாக இருக்கும். விரிப்பிற் பெருகும்; இரண்டொரு விஷயங்களேப் பிரதானத்தைக் கொண்டு பொதுவாக எடுத்துச் சொன்னல் பெண்கள் தாம் ஒருவர்மேல் காதல் கொண்டிருக்கும் பொழுது, பெற்ருேர் வேறு புருஷர்களேப் பேசிக்கொண்டு வந்தாலும் 'விவாகம் வேண்டாம்' என்று சொல்லுவார்கள். பேசிவந்த புருஷன் அழகில்லாதவனுக. இருந்தாலும் 'விவாகம் வேண்டாம்' என்று சொல்லுவார்கள். பெண்கள், பெரிய உத்தியோகஸ்தர்களே நினேத்துக் கொண்டு இருக்கும் பொழுது வெறும் ஆசிரியர்களேப் பேசிக்கொண்டு சென்ருலும் 'விவாகம் வேண்டாம்' என்று சொல்வார்கள். இப்படிப்பல; என்று இழுத்து முடித்தேன்.

'வாணு' 'அப்படியானல் இந்த நியாயங்கள் ஆண்களுக்கு விதிவிலக்கானவையா?' என்று கேட்டாள்.

நியாயங்கள் 'பெண் ஆண் கட்சி தோரணேயில் செல்கிறது; ஆபத்தாகவும் முடியலாம்; என்று நினேத்து, 'என்னேப் பொறுத்த வரையில் இவைகள் விதிவிலக்கானவையே; ஆனல், இவையெல்லாம் விதியைப் பொறுத்தவையே; நிகழவேண்டியவற்றிற்கு எவ்விடத்தும் வாயில்கள் உண்டு?' என்று குறிப்பாக முடித்தேன்.

பின்பு விவாதம், விதி, மதியைப்பற்றிச் சென்றது. நான் எழும்பி வரும்பொழுது அவள் என்னேப் பார்த்துச் செய்த குறுநகை, அன்று என்னே நித்திரை கொள்ள விடவில்லே.

## 9. காய்ச்சலில் ஒரு புது வகை

நானும், 'வாணு'வும் மறுநாள் மாலே குளக்கட்டில் உலாத்தும்பொழுது, 'தனக்குக் காய்ச்சல் காய்கிறதா?' என்று தொட்டுப் பார்க்கும்படி கேட்டாள். நான் தொட்டுப் பார்த்துவிட்டு, 'அக்கினி யென்றறியாயோ, கற்புடைய மங்கையரை' என்றேன்.

= = கசின் = =

வாணு கலகலவென்று சிரித்துவிட்டு 'அன்று நீங்கள் ஏன் பயந்துபோய் நின்றீர்கள்' என்று கேட்டாள்.

"அக்கினி" என்று, எச்சரிக்கைசெய்யும்பொழுது, எப்படிப் பயப்படாமல் நிற்கலாம்?

'வாணு,' சிறிது யோசித்துவிட்டு, 'அக்கினிக்கும், காதலுக்கும் ஏதும் சம்பந்தம் உண்டா' என்று கேட்டாள்.

'அக்கினிக்கும் காதலுக்கும் சம்பந்தம் இருக்கலாம்; ஆனல் ஒரு ஆசிரியருக்கும் காதலுக்கும் எழுத்தளவில் தவிர ஒரு சம்பந்தமுமிராது; என்பது நிச்சயம்?

'அப்படியானல் ஆசிரியர்களுக்குக் காதல் என்பதே இடையாதா?'

'ஆசிரியர்களுக்குக் காதல் இருக்கலாம்? ஆனல் ஆசிரியர்களேக் காதலிப்பவர்கள்தான் ஒருவருமில்லே.'

'சரி, நான் உங்களேக் காதலிக்கிறேன்; என்று வைத்தால்? ......'

'வைக்கலாம்; ஏனெனில் இந்த ஊரின் பெயர் காதலியார் சம்மளங்குளம்?'

இந்த நேரத்தில் [சிவபூசையில்] காடி குறுக்கிட்டது. 'வாணு'வின் அந்த அத்தியந்த வேலேக்காரன் 'காதலியார் சம்மளங்குளம் அல்ல; 'கலியாணம் முடித்த சம்மளங்குளம்' என்று சொல்லுங்கள். ஒவ்வொரு வீடாகத் திரிந்தும், ஒரு தோடம்பழம் 'தாமாட்டேன்' என்றுவிட்டார்கள்என்று சலித்துக்கொண்டுவந்தான்.

## 9. ஐம்பதுக்கைம்பது

மறுநாள் காலே, 'ஐம்பதுக்கைம்பது' கொள்கையைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?' என்று கேட்டுக்கொண்டு 'வாணு' வந்தாள்.

'சிங்களருக்குச் சைவசித்தாந்தம் தெரியாமல் இருக்கலாம்; ஆனல், தமிழனுக்குத் தெரிவது நூதனமல்ல.

சைவசித்தாந்தத்திற்கும், ஐம்பதுக்கைம்பதுக்கும் என்ன சம்பந்தம்?

சைவசித்தாந்தமே ஐம்பதுக்கைம்பது மயமானது. சைவசித்தாந்தத்தின்படி கடவுளே, சிவனும் சக்தியுமாக ஐம்பதுக்கைம்பது மயமானவர். உலகமே ஐம்பதுக்கைம்பது மயம். ஸர்வம் ஐம்பதுக்கைம்பது மயம் ஜகத்.

ஒரு கோணத்திலிருந்து மற்ருெரு கோணத்திற்குக் கதையை இழுத்துக்கொண்டு போக, ஆசிரியர்கள் எல்லாருக்குந் தெரியுமா?

"ஒரு பெண், அப்புக்காத்துக்கள், டாக்குத்தர்கள், இஞ்சினியர்கள் இப்படிப்பட்டவர்களோடு பேசிக்கொண்டிருக்கிற நேரத்தில், ஒரு வெறும் ஆசிரியருடன் பேசிக்கொண்டிருக்கிருள், என்ருல், ஆசிரியர்களுக்குத் திரிகோண சாஸ்திரமலல; சர்வகோண சாஸ்திரமும் தெரிந்திருக்கவேண்டும்.

'எவளாயினும், வாழ்க்கை முழுவதும் சந்தோஷமாயிருப்பதை விரும்புவாளா? அப்புக்காத்துக்கள் டாக்குத்தர்கள், இஞ்சினியர்கள், என்ற பெயரைக் கண்டு விரும்புவார்களா?"

எனக்கு விஷம் தலேக்கேறிவிட்டது. "அது நிற்க, ஐம்பதுக்கைம்பது நியாயத்தை இழுக்கவேண்டிய காரணமென்ன?" என்றேன்.

"இன்றைக்கு நான், அரைவாசிப் பிள்ளேகளேப் படிப்பிக்கப் போகிறேன் நீங்கள் அரைவாசிப் பிள்ளேகளேப் படிப்பியுங்கள்."

"முடியாது; முழுப்பிள்ளேகளேயும் நீங்கள் படிப்பியுங்கள்; நான் இன்று நித்திரை கொள்ளப்போகிறேன்."

"அப்படியானல் நானும் நித்திரைகொள்ளப் போகிறேன்."

இந்தநேரத்தில் பழையபடியும் காடி நுழைந்தது. வாணு கோப்பியை வாங்கி, "ஐம்பதுக்கைம்பது; இந்தாருங்கள், சாப்பிடுங்கள்" என்று தந்தாள்.

அரசியல் மொழிகள் ஐம்பதுக் கைம்பதில் தோற்றுப் போனலும், எங்கள் வாழ்க்கையில் ஐம்பதுக் கைம்பது இம்மி அளவும் தவருமல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

# இயையாப் பொருள் முடிபு

பண்டிதர் சி. கணபதிப்பிள்ளேயவர்கள் இலக்கியப் பொருள்களேச் சந்தர்ப்பம், பாத்திரம், உணர்ச்சியென மூத்திறப்படுத்தினுர்கள். இப் பொருந்தா முடிபிற்குத் தொல்லாசிரியர்களேயும் இழுத்துள்ளார், தாம் கண்ட முடிபு பழமையின் அஸ்திவாரத்தில் எழுப்பப்பட்டதெனப் பிறரை நம்பச்செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவரை அத்தகையதொரு முடிபிற்குக் கொண்டுவந்து சேர்த்துவிட்டது. சந்தர்ப்பத்தை முதலென்றும் பாத்திரத்தைக் கருவென்றும் உணர்ச்சியை உரியென்றுங் கூறித் தம் முடிபுகளேப் புகுத்த முயன்றது நேரிதன்று. இலக்கியம் முழுவதையும் அடக்கும் வகையில் ஒரு வரையறை செய்தார் பண்டிதர் என்பது, அவர் கொள்கை எதுவாயினுந் தன்னாதேற்கும் நண்பர்களின் கருத்து. அவ்வாருயின் பண்டிதரவர்கள் இலக்கியத்தின் ஒருபகுதியை மட்டும் ஆராய்தற்கு உபகாரப்பட்ட முதல் கரு உரிகளோடு தமது சந்தர்ப்பம் முதலாய சொற்களேச் சமமான கருத்துடையனவென எடுத்தாளுதல் பொருந்தாதல்லவா? சிலப்பதிகாரத்தை வெளிப்படையாக நின்று வைத பண்டிதரவர்கள் மறைமுகமாகத் தொல்லாசிரியர்களது இலக்கிய ஆராய்வு அனேத்தமே பொருந்தாதெனக் கூறினுரென்று கொள்வதன்றி வேறெவ்விதம் உரைப்பது? இலக்கிய நூல்களில் மிக மிக உயர்ந்த சிலப்பதிகாரத்தைக் குப்பைக் கூடைக்குள் இட்ட பண்டிதர் அவர்கள் தமிழ் மொழிக்கே தனிச் சிறப்பாயமைந்த பொருளாராய்ச்சியிலும் மாசேற்றியுள்ளார். இன்று தமது ஆராய்ச்சிக்கு அரண் தேடுவார்போல [illegible] இயவர் நானே பழந்தமிழ்ப் புறப் பொருளே முதல் கரு உரி யென்ற முறைபற்றி ஆராயாதது குற்றமென்று கூறிப் பழந் தமிழ் இலக்கணங்களேயும் அவைபற்றியெழுந்த இலக்கியங்களேயும் அக்கினிக்கே கொடுங்கள் என்று கூறினல் பழந்தமிழ்ப் பிரியர்கள் உடன்படுவார்களா?

முதல் கரு உரி என்பனவற்றைச் சந்தர்ப்பம் பாத்திரம் உணர்ச்சி என்ற பெயர்களால்

**பண்டிதர் க. நாகலிங்கம்**

வழங்குவது தொல்லாசிரியர் கருத்தொடு முரணும் என்பதை வித்துவான் திரு. க. வேந்தனுர் அவர்கள் பழந்தமிழ்ப் பனுவல்களே யாராய்ந்து வெளிப்படுத்தினுர்கள். வேந்தனுர் கண்ட இம்முடிபைத் தமிழ்கூறு நல்லுலகம் ஏற்றுக்கொண்டுள்ளதென்பதில் ஐயமில்லே. வித்துவானவர்களின் ஆராய்வைப் பல வழிகளிலும் குற்றம் பாரித்த திரு. வ. ந. அவர்களே இவ்விடத்தில் உடன்பட்டுக்கொண்டிருக்கும்போது பிறர் உடன்படுவரென்பது கூறவும் வேண்டுமோ? முதல் கரு உரிகளேச் சந்தர்ப்பம் பாத்திரம் உணர்ச்சி என்ற பெயர்களால் பண்டிதர் வழங்கியது பொருந்தாதென்பதை நண்பர் மறைமுகமாகவேனும் உடன்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. உடன்பட்ட நண்பர் வித்துவானுக்குப் பெரிய சங்கடமான நிலேயை உண்டாக்கியிருப்பதைக் காணும்போது நாம் ஆறுதலடைய முடியாது. இவ்விடத்தில் நாமாகப்பேசுவது விவாதத்திற்கு ஏற்றதல்ல. நண்பர் திரு. வ. ந. அவர்களே பேசட்டும். 'சந்தர்ப்பம் என்னுஞ்சொல் ஆற்றலற்றதெனின் தகுந்த சொல்லேக் காண்பதில் வேந்தனுர் முனேயலாமே' என்பதும் '......பொருத்தமற்றதெனின் இதிலும் வேந்தனுர் முயற்சிசெய்யலாமே' என்பதும் நண்பர் வார்த்தைகளே. முதல் என்பதைச் சந்தர்ப்பம் என்று

## இலக்கிய அரங்கம்

வழங்குதல் தகாது என்ற முடிபு கட்டியதை நண்பர் உடன்படாதிருந்தால் மறுத்திருக்க வேண்டும். உடன்பட்டிருந்தால் வேந்தனுரை மெச்சியிருக்க வேண்டும். இவ்விரண்டுமெல்லாத ஒருபுதுமரபு கடைப்பிடித்தல் நண்பர்செல்லுந் தருக்க நெறிக்கு ஏற்றதாகாது.

முதல் என்பதை முதல் என்றே அழைத்தால் என்ன என்று நாம் கேட்கிறேும். அதற்கு ஒரு (சந்தர்ப்பம்) வடசொல் கண்டு பிடிக்க வேண்டிய அவசியமென்னவோ யாமறியேம். ஒருபொ) ருளேக் குறித்தற்கு ஒருசொல் போதாதென்பதா நண்பர் கருத்து? பண்டைத் தமிழ்ச் சான்ருேர் வழங்கிய சொற்களே இனிமேல் வழக்கக்கூடாதென்பதா நண்பர் மதம்? பண்டிதர் கருத்தைப் புகழ்ந்து பழகிய நண்பரவர்கள் பழந்தமிழ்ச் சொற்களேக் குப்பைக் கூடைக்குட் போட விரும்புகிருரா? கருந்தனம் கைத்தலத்து உய்த்துச் சொரிந்திட்டாங்கு அரிப்பரித்து எய்த்து அப் பொருள் செய்திவோர் நெறியில் வித்துவானவர்களே நண்பர் புகுத்துவதற்கு வேறு காரணம் ஏதுமிருப்பதாக நம்மால் விளங்க முடியவில்லேயே.

முதல் கரு உரிப் பொருள்கள் ஒருசார் இலக்கியம்பற்றியனவாக இருப்பதால் இவற்றிற்கு ஏற்றனவாகக் காணப்படும் சொற்களும் ஒருசார் இலக்கிய ஆராய்ச்சிக்கே உபயோகமாதலன்றித் தமிழ் இலக்கியப் பெரும்பரவை அனேத்தையும் ஆராய உபயோகப்படாவென்பது வெளிப்படை. அவ்வாறன்றி அச்சொற்கள் முழு இலக்கிய வரையறைக்கு உபகாரப்படுமேல் அவை முதல் கரு உரிப் பொருள்களோடு ஒத்த கருத்தினவாதல் சாலாது. இந்நிலேயிற்

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா பொருட்காட்சி

சுதந்திரதினத்தை முன்னிட்டு அரசாங்கம் ஸ்ரீலங்காவில் நடத்தவிருக்கும் பொருட் காட்சியில், அரசாங்கப் பகுதிகள் பங்கு பற்றி அவை அங்கு செய்யும் வேலைகளைக் கற்பனைக் கண்கொண்டு பார்க்கின்றார் ஜாக்கஸ். அத்துடன் வாசகர்களையும் பொருட்காட்சி மைதானத்துக்கு அழைத்துச் செல்லுகின்றார், இக் கட்டுரை டைம்ஸ் ஒவ் சிலோன் பத்திரிகையில் வெளியாகியுள்ளது. ப-ர்.

இவ்வாண்டு சுதந்திர தினம் அதற்குரித்தான சகல ஆடம்பரங்களுடனுங் கொண்டாடப்படும்.

பீரங்கி வேட்டுகளும், மணி ஓசைகளும் காதுகளையே செவிடுபடுத்திவிடும். கண்டி நடன கோஷ்டியினர் புடை சூழ, மந்திரிசபையினர் யானைகள்மீது மாலைகளுடன் பவனி வருவார்கள். இச் சீர்சிறப்புகளுக்குமிடையே சுதந்திர சதுக்கத்துக்கு அஸ்திவாரக் கல் நாட்டப்படும்.

இத்தனைக்கும் சுதந்திரதினத்து நிகழ்ச்சிகளில் எவ்வித பிழையும் காணமுடியாது. ஆனல், பல்வேறு அரசாங்கப் பகுதியினரும் செய்துவரும் வேலைகளை மக்கள் பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படுமெனக் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சி நடைபெற மாட்டாது. இந் நிகழ்ச்சியானது நீக்கப்பட்டிருப்பது மகா குற்றமாகும்.

### துர்ப்பாக்கியம்

இதுகாரணமாகச் சுதந்திர விழாவின் சோபையே மங்கிவிடுகின்றது. குறித்த அரசாங்கப் பகுதியினர் அச் செலவுகளுக்கான பணத்தைச் சேமிக்காத காரணத்தினற்றான் இது நீக்கப்பட்டதெனத் தெரிகின்றது. இம் முடிவு சரியானதாயினும் மிகவும் துர்ப்பாக்கியமானதாகும். இது நடைபெறுவதாயின், லண்டனிலுள்ள இலங்கை நிலையம் பணத்தை வாரி இறைக்கும் இரகசியத்தையும் நாங்கள் அறிந்துகொள்ளலாம்.

சுதந்திரதினத்தை முன்னிட்டு ஏற்பாடாகும் ஸ்ரீ லங்கா பொருட்காட்சிக்குப் பொதுமக்கள் தங்கள் பங்கை உதவவேண்டியவர்களாகின்றனர். அரசாங்கப் பகுதியினரின் நிகழ்ச்சி நீக்கப்பட்டிருப்பதின் நிமித்தம் பொதுமக்களிடம் மேலதிகமான வரிப்பணம் அறவிடப்பட மாட்டாதாயின், நாங்கள் இதுபற்றிச் சரியான கோணத்திலிருந்து விஷயத்தை ஆராய்வது சாலும். அரசாங்கத்திடம் போதிய பணம் இல்லாத காரணத்தால் நீக்கப்பட்ட காட்சியை, அதிகமான வரியிறுக்கும் பெரிய புள்ளிகள் தாங்களே அதை நடாத்த முன்வந்தனர். இப் பொருட்காட்சி பற்றிய சகல விபரங்களையும் இப்போது தருவது சாத்தியமாகாதவிடத்தும் அது எவ்வகையில் நடைபெறுமென்பதுபற்றி அறிந்து கொள்வது நன்று.

### வரவேற்பு

பொருட்காட்சி மைதானத்து வாயல் வில்வடிவத்தில் அமைந்திருக்கும். அதில் மந்திரிமாரின் மாபெரும் படங்கள் மாட்டப்பட்டிருக்கும். அலங்காரமான இந்த அமைப்பு இராக்காலத்தில் ஒளிமயத்தில் மிதந்துநின்று 'டால்' வீசும். இங்கு செல்பவர்களைக் குண்டசாலை விவசாயப் பள்ளிக்கூடத்திற் பயிலும் பெண்கள் வரவேற்பு உபசரிப்பார்கள். இம் மாணவிகள் காற்சட்டையிற்றான் காட்சியளிப்பார்கள். இவர்கள் தெறி ஒட்டைப் பூக்களும் விற்பார்கள். சௌகரியமாக ஓடி ஆடித்திரிவதற்காகவே பெண்மணிகள் காற்சட்டைகளை மாட்டவேண்டியதாயிற்று. அப்படியானற்றான் பணங் கொடுத்துத் தெறி ஒட்டைப்பூ வாங்காமல் ஓடித் தப்ப முயலும் ஆண்களுக்குப் பின்னல் இவர்கள் ஓடமுடியும்.

அவர்களது வலைக்குள் அகப்படும் ஆண்கள் அத்தனை பேரும் வலதுபக்கத்திலுள்ள மாபெரும் கட்டடத்துக்குள் அழைத்துச் செல்லப்படுவார்கள். இங்கு அரசாங்க நிர்வாக யந்திரம் எவ்வாறு நடைபெறுகின்றதென்பதைப்பற்றி ஒவ்வொன்றாகக் காட்டுவார்கள். அரசாங்க யந்திரம் எவ்வாறு அசையாது நிறுவப்பட்டிருக்கின்றதென்பதையும் இங்கு தெரிந்துகொள்ளலாம். இதற்காகச் சகல அரசாங்கப் பகுதியினருக்கும் வெவ்வேறு திறந்த அலுமாரிகள் உதவப்படும். இங்கு பிரிக்கப்பட்டுள்ள பல்வேறு தட்டுகளிலும் அரசாங்க நிர்வாகம்பற்றிய சடிதங்களும், அறிக்கைகளும் சிக்காராக அடுக்கப்பட்டிருக்கும். நிர்வாகம் சம்பந்தமான முக்கிய அறிக்கைகளை இங்கு வைத்தாற் பின்னர் எடுக்கவே முடியாது. அடக்கம்செய்த பிணம்போல் அவை அங்கு அடங்கி ஒடுங்கிக் கிடக்கவேண்டியவைதான்.

### கூடைக் குவியல்

வேறோர் பகுதியிற் கூடைகள் தொகை வகையாகச் செய்து குவிக்கப்படுவதைக் காண்பீர்கள். கூடைகள் பருமனாகவேயிருக்கும். ஏனெனில் இக் கூடைகளுக்குள்ளேயே, பொதுமக்கள் அரசாங்கத்துக்கு எழுதுங் கடிதங்கள் யாவும் இடம்பெறுகின்றன. இக்கூடைக்குள் நிறைந்துள்ள கடிதங்களை மக்கள் கவனமாகப் படித்துப் பார்த்தால், அவர்கள் எழுதும் கடிதங்களுக்கு அரசாங்கம் எதற்காகப் பதில் எழுதுவதில்லையென்பது நன்கு புலப்படும்.

இனி, மைதானத்திலுள்ள மற்றோர் நிலையம் மக்களின் கவனத்தை ஈர்க்கின்றது. இங்கு மரத்தாலாய தட்டுகளை நிபுணர்கள் செய்கின்றனர். லாச்சிபோன்ற இத்தட்டுகள் காத்திரமாகவே இருக்கின்றன. ஏனெனில் இவற்றை உபயோகிப்பவர்கள் என்றும் குளிர்மையாக இருப்பதில்லை. அவர்களுக்குச் சூடு பிறந்தவுடன் அந்தத் தட்டுகள் பொடிப் பொடியாக நொருங்கி விடவுங்கூடும். அத்துடன் இவை தீப்பற்றி விடவுங் கூடாது. ஏனெனில் அரசாங்க ஊழியர்கள் சிலரின் கைகளில் எந்த நேரமும் 'சிகரட்' எரிந்து புகைந்துகொண்டேயிருக்கும். அத்துடன் அத் தட்டுகளிற் சிகப்புப் பென்சிலாலும் ஊற்றுப் பேனவாலும் எழுதக் கூடிய வகையிலும் அவைகள் செய்யப்படவேண்டும்.

### உள்வேலை

இதைக் கடந்து அப்பாற் சென்றல் அரசாங்கத்தின் உள்ளப்பாங்கானதுவேலைசெய்கின்ற முறையை அறிந்து கொள்ளலாம். கண்ணுடிப் பெட்டிகளுக்குள்ள அரசாங்கத்தின் மின்சார வேலைப்பாடுகளைக் காணலாம். தந்திக் கம்பிகளின் நீரோட்டங்களை அறியலாம். புகையிரதப் பகுதியிலுள்ள கைகாட்டிகளின் நாட்டங்களை உணரலாம். மீன்பிடி ஆராய்ச்சிப்பகுதி மந்திரி தூண்டில் போடுவதையும் சொந்தக் கண்கொண்டு பார்க்கலாம். இப்படிப் பலப்பல....

அரசாங்க நிர்வாகத்தைக் கரைத்துக் குடித்த புலிகள், அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வுகளைப் பற்றியும், புதிதாகச் சேர்பவர்களுக்கு வீட்டுவாடகை, சம்பளத்திட்டம், 'பென்ஷன்' பணம் என்பன பற்றியும் பெரிய மேசைகளுக்கு முன்னல் இருந்து தலைகளை உடைப்பதைப் பொருட்காட்சி மைதானத்தின் மற்றோர் மூலையிற் காணலாம்.

### இரகசிய வேலை

வேறோர் இடத்தில் அலங்கரிக்கப்பட்ட கூடம் ஒன்று தென்படும். இங்கு அரசாங்கம் எவ்வாறு சில பொருள்கள் மீது தீர்வைகளை வடித்தெடுக்கின்றதென்பது காண்பிக்கப்படும் சாராயம் வடிக்கும் முறையை இங்கு நேரில் அறிந்துகொள்ளலாம். அத்துடன் பல்வேறு ரகத்தைச் சேர்ந்த சாராயம் முத்திரை யிட்ட போத்தல்களிற் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

இனி, மிக முக்கியமானதோர் இடத்துக்கு வருகின்றோம். இங்கு பரம இரகசியமான விஷயங்கள் நடைபெறும். வரவு செலவுத் திட்டம்பற்றிய இரகசியங்கள் உருவாகிப் படிப்படியாக வெளியாகுவதைக் காண்போம். அங்கு திறந்து வைக்கப்பெற்றிருக்கும் அறிக்கைகளை ஒருவரும் பார்க்காதிருப்பதற்கான ஒழுங்குகள் சர்வஜாக்கிரதையுடன்கையாளப்படும். வரவு செலவுத் திட்ட இரகசியங்கள் தயாரிக்கப்படும் அறை முழுக்க முழுக்கச் சீமேந்திலேயே நிறுவப்பட்டிருக்கும். இரும்பாலாய கதவானது மூன்று பாரிய இரும்புப் பூட்டுகளாற் சிக்காராகப் பூட்டப்பட்டிருக்கும். இதற்கான திறப்புகள் மூன்று அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும். இருவர் ஒன்றுகூடினற்றான் அறை திறப்பதுபற்றி ஆலோசிக்கலாம். இவ்வளவு பாதுகாப்புகளுக்குமிடையே, வரவு, செலவுத் திட்டம்பற்றிய இரகசியங்கள் வெளியாகிவிடுமாயின் சுவரில் ஏற்பட்டுள்ள வெடிப்பைச் சுட்டிக் காட்டவேண்டியது தான்.

### வாய்ப்பூட்டு

இவற்றினும் பார்க்க மிகவும் ஆச்சரியமும் கவர்ச்சி நிறைந்ததுமான ஒரு பொருள் உண்டு. உருக்காலாய ஒரு கூண்டையும் அதற்குள் அடைபட்டிருப்பதையுந்தான் குறிப்பிடுகின்றேன். அக் கூண்டில் P. S. R. 2083 என்று எழுதப்பெற்ற ஒரு கடதாசிமட்டை தொங்குகின்றது. அதற்குள் அடைக்கப்பட்டிருப்பவர் யார் தெரியுமோ? அவர்தான் அரசாங்க லிகிதர்கள் சங்கத்தின் உத்தியோகஸ்தர் ஒருவர். அவர் கண்ணுற் பார்க்கின்றார். கால், கைகளை அசைக்கின்றார். ஆனல் அவருடைய வாய்க்கு மட்டும் பூட்டிடப் பட்டிருக்கின்றது. காதுகளுக்கும் மெழுகு உருக்கி வார்த்து முத்திரையிடப்பட்டிருக்கின்றது. மற்றும்படி அவருக்குச் சகல சுதந்திரங்களுமுண்டு. இச் சுதந்திரமானது, சுதந்திரம் பெற்றுள்ள ஸ்ரீலங்காவின் பிறப்புரிமையாகும்.

இவற்றைத்தான் பொருட்காட்சியிற் பார்க்கலாம் என வாசகர்கள் கருத வேண்டியதில்லை. இக் குறிப்புக்களைக் கொண்டு அங்கு நடைபெறவிருக்கும் சகல காரியங்களை அறிந்துகொள்ளலாம் என்பதற்காகவே இவற்றையெல்லாம் எழுதவேண்டியதாயிற்று. அரசாங்கத்தினர் தமக்கும், தமக்காகவும் செய்யும் வேலைகளை அறிந்து கொள்வதற்கு இப் பொருட்காட்சி அரியதோர் சந்தர்ப்பத்தை அளிக்கின்றது.

---

# சுதந்திர சோதி

— நவாலியூர் சோ. நடராஜன் —

பிலஹரி ஆதி

பல்லவி

சோதி எழுந்தது பார்—சுதந்திர
சோதி எழுந்தது பார்

அனுபல்லவி

ஆதவன் சிவனொளி பாத மலையினில்
பூதி விளங்கிட சோதி விரித்தென—சோதி

சரணம்

ஆரபி

அடிமை இருட்குலம் மிடிமை விலங்குகள்
அல்ல லெலாமின்றே மெல்ல மறைந்தன
குடிமை பெருக்கியிக் குவலய முய்ந்திட
கோதமன் சொல்தர்ம நீதி விளங்கிட—சோதி

பந்துவராளி

ஓதி ஓதிஉல குய்ந்திடப் பெருகி
போது சிந்திவரு கோதில் மாவலியும்
சாது சாதுவென சாற்று மோதையிரு
காது கேட்குமனம் கருணை பொங்கிடவே—சோதி

மோகனம்

தங்கள் பாரமென எங்கள் பூமிதனை
பங்கு போட்டவரும் பாய் சுருட்டினர்
எங்கள் பாரமினி ஏற்ற வாறவர்கள்
பொங்கிப் போர்புரிந்து மங்கிடா தளித்தல்-சோதி

---

# இயையாப் பொருள் முடிபு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய சொற்களைக் கண்டுபிடிப்பதால் வரும் பயனென்னை? முற்றும் புதியநெறி வகுத்து அதைப் பழைய நெறியோடு பொருத்திக் காட்டுவது பொருந்தாதென்பதைப் பண்டிதரும் பிறரும் அறிந்துகொள்வார்களாக. இவ்வித முடிபை வித்துவான் அவர்கள் மரபுநிலை திரிந்த மாற்றம் என்று பெயரிட்டதில் என்ன வியப்பு!

தொல்லாசிரியர்கள் இலக்கியப் பொருள்களை அகம் புறம் என இரண்டாக வகுத்து அவற்றிற்குத் திணைதுறைகளும் தனித்தனி வெவ்வேறாக வகுத்தார்கள். பண்டிதர் அவர்கள் அகம் புறம் என்ற பொருட் பாகுபாடிரண்டிற்கும் ஒரேநெறியில் வரையறை செய்ய முனைந்தார்கள். தொல்லாசிரியர்கள் அகத்தைமுதல் கரு உரியென மூன்றாக வரையறை செய்தனர். பண்டிதர் இலக்கியம் அனைத்தையுமே முதல் கரு உரி (சந்தர்ப்பம், பாத்திரம், உணர்ச்சி) என மூன்றாக வகுத்தார்கள். தொல்லாசிரியர்கள் அன்பினைந்திணை யிலக்கியங்கள் சுட்டியொருவர் பெயர்கொளப் பெறார் என்று கூறினர். பண்டிதர் நல்லிலக்கியங்கள் அனைத்துமே சுட்டியொருவர் பெயர்கொளப்பெறார் என நுவன்றாராவர். பண்டிதாவர்களது ஆராய்வுப்படி நோக்கின் புறநானூறு முதலிய புறப்பொருள் சம்பந்தமான நூல்களெல்லாம் முதல்தா இலக்கியமாதற்குத் தகுதியற்றனவாயின. இராமாயணத்தோடு சரிநிகர் சமானமாக நிற்றற்குத் தகுதியற்றதெனச் சிலப்பதிகாரத்தைப் பண்டிதர் குப்பைக் கூடைக்குள் கொண்டுபோனபொழுது கனன்றெழுந்த தமிழ்நாடு அகநானூற்றோடும் கலித்தொகையோடும் சரிநிகராக நிற்கத் தகுதியற்றனவென மறைமுகமாகப் புறநானூற்றையும் பிற புறப்பொருள் நூல்களையும் ஒதுக்கி வைத்தமையைப் பார்த்துக்கொண்டிருக்காது.

'பண்டைத் தமிழ் அரசர்களது வீரம் கொடை முதலாய நல்லியற் பண்புகளென்னும் உரியை முகந்த புலவர்கள் அவை மாசற்றனவாதலால் அவற்றை அசுத்த பாத்திரத்தில் வைத்துக் கூறாது xy இல் அதாவது அம்மையப்பனில் வைத்துக் கூறினரல்லர். ஆதலால் அவர்கள் இலக்கிய மாபிற் றவறிவிட்டனர்' என்று இனியொரு ஆராய்ச்சியிற் பண்டிதர் கூறக்கூடும். புறநானூறு முதலாய புறப்பொருள்களில் வரும் உணர்ச்சி உலக பாத்திரங்களில் வைத்துக் கூறப்பட்டமையால் உவர்ப்பு நீக்கி முகக்கப்பட்டதன்றென்பதே பண்டிதர் கருத்தாதல் வேண்டும்.

'தமிழ்ப் பண்டிதர்கள் நல்லனதியன ஆராய்ந்து கொள்ளாமல் பழந் தமிழ் நூல்களையெல்லாம் உச்சிமேல் வைத்துப் போற்றுகின்றனர்' எனப் பிறமொழி வல்லுநர்கள் தமிழ்ப் பண்டிதர்களிற் குறை கூறுவது வழக்கம். பண்டிதர் சி. கணபதிப்பிள்ளையவர்கள் தாம் இத்தகைய பண்டிதர் வரிசையிற் சேராதவரென்பதை நிரூபித்தற்குப் பழந்தமிழிலக்கியங்களிற் சிலவற்றை இலக்கிய வரிசையிலிருந்து இறக்கிக்காட்ட முனைந்தார்களெனவே யாம் எண்ணுகின்றேம். இது உண்மையாகுமேல் பண்டிதாவர்கள் தம் அறிவுக்கு உகந்தவரையில் அல்லது தமிழபிமானிகள் சிலரின் அபிமானத்தைப் பெறும்வகையில்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னுகம், சர்வதாரி, தை கஎ

— காந்தி ஆண்டு 80 —


## சுதந்திரத் திருநாள்

எந்நாட்டு மக்களும் சுதந்திரத்திருநாளைக் கொண்டாடுவது வழக்கம். அத்திருநாள் நாட்டுமக்கட்கு அரிய பெரிய விஷயங்களை நினைவூட்டுந்தினமாகும். தம் நாடு அரிய சுதந்திரத்தைப் பெற்ற வரலாறுகளையும் சம்பவங்களையும், சுதந்திரத்துக்காக உழைத்த தலைவர்களையும் அவர்கள் செய்த தியாகங்களையும் வருடத்துக்கொருதரமாவது நினைத்து நன்றியறிதலுடன் இறுமாப்படைவது மக்கள் கடனாகும். இலங்கை மக்கட்கும் இத்தினம் மிக்க விசேஷம் படைத்த திருநாள் என்றே கூறுவாம். அடுத்த வெள்ளிக்கிழமை மிக்க குதூகலத்துடன் இத்திருநாளைக் கொண்டாட இலங்கை அரசினர் வேண்டிய வேண்டிய ஆயத்தங்கள் செய்கின்றனர். இலங்கைவாழ் மக்கள் யாவரும் இலங்கை என்னுடைய தாய் நாடு; நாம் அடிமைத் தளையினின்று நீங்கிவிட்டோம் நிமிர்ந்து நின்று நம் நாட்டுக்கு உழைக்க எத்தடையும் கிடையாது,'' என்று கூறவேண்டியதினமல்லவா இத்திருநாள்?

சுதந்திரத்தை நம் நாடு அடைந்ததுடன், நமக்கு வேண்டிய வேண்டிய செல்வங்களையும் வசதிகளையும் சௌகர்யங்களையும் பெற்றுவிட்டதாக எண்ணக்கூடாது. மிகப் பிரமாதமான தேசத்தொண்டுகள் — சேவைகள் — புனருத்தாரண வேலைகள் என்பவைகளைச் சிறிதுந்தயங்காது செய்யவேண்டிய காலம் இதுவன்றே! சுதந்திரத்தைப் பெற்றுவிட்டோம், இனி நமக்கென்னவென்று தூக்கமடையின், பெற்ற சுதந்திரத்தினுல் ஒரு பயனும் வரப்போவதில்லை. இதுவரையும் நம் நாடு அந்நியர் ஆதிக்கத்துள்ளிருந்தமையால், உண்மையான முன்னேற்றத்தை எத்துறையிலாவது அடைந்ததில்லை. ஐரோப்பிய முதலாளிகள் அரசினருதவியுடன் நம் நாட்டுச் செல்வத்தை எல்லையின்றிக் கவர்ந்து சென்றதுதான் இதுவரையும் நடந்த சம்பவம். இனி அப்படி நடக்கக் காரணமில்லை. சுதந்திரம் பெற்ற இலங்கையின் செல்வம், நம் நாட்டின் உண்மையான ஈடேற்ற முயற்சிகளிலும் வழிகளிலுமே செலவாகவேண்டும். இதை அரசினர் இலக்காகக்கொண்டே அரசியல் இயந்திரத்தைச் செலுத்திச் செல்லுதல் வேண்டும்.

இலங்கை யரசினர் புதிதாக முன்னேற்றமான திட்டங்களையும் இயக்கங்களையும் வகுத்து, விரைந்து நம் நாடு முன்னணிக்கு வரச் செய்ய வேண்டும். ஒரு நாட்டின் உண்மையான செல்வநிலை அந்நாட்டுப் பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை நோக்கியே அறியப்படுவது. இலங்கையில் ஏழைப் பொது மக்கள் பலவழியிலும் அடையுங் கஷ்டங்களை இங்கு எடுத்துக் கூறின் விரியும். இப்போதைய நிலையில் செலவுகள் பன்மடங்கு அதிகரித்துச் செல்கின்றதே யன்றி, வரவு குன்றிக்கொண்டே செல்கின்றது இதற்கு மாருகச் செலவு குறைந்தும் வரவு கூடியதுமான நிலை ஏற்பட்டாற்ருன், உண்மையாக நம் நாடு முன்னேற்ற மடைகின்றதெனலாம். இதை இலக்காகக்கொண்டே, இலங்கை அரசினர் பல்வேறு திட்டங்களையும் வகுத்து அவைகள் நன்கு கைகூட வழிகாணவேண்டும். ஏழைக் கமக்காரனின் பொருளாதார நிலையை நோக்கித்தான் ஒரு நாட்டின் உண்மையான முன்னேற்றம் வரையறுக்கப்படும்.

நாட்டின் செல்வத்துக்கு இன்றியமையாத சாதனங்கள், இதுவரையில் இலங்கையில் நிலைபெற்றிருக்கவில்லை. அந்நிய ஆட்சியின் மாட்சியே அதற்குக் காரணம். விவசாயம், கைத்தொழில், வியாபாரம், நீர்ப்பாய்ச்சல் முதலிய துறைகளில் நம் அரசினர் முனைந்து நின்று பணியாற்றி நன்மையடைய வேண்டும். அந்நிய நாடுகளையே நம் நாடு எல்லாப் பொருட்களுக்கும் பாதுகாப்புக்கும் தங்கியிருக்கும் வரையும், உண்மைச் சுதந்திரத்தை நாம் அடைந்து விட்டோமென்று திருப்தியடைவதெப்படி? இன்று அரசியற் சுதந்திரத்தைப் பெற்றும் பொருளாதார விஷயத்தில் அந்நியரின் அடிமைகளாகவேயிருக்கின்ருேம். போதிய மூலப்பொருள் கிடைக்கப்பெறும் நம் நாட்டில், தொழிற்சாலைகளை அமைத்தால் அதனுல் ஏற்படக்கூடிய பெருநன்மைகள் இம்மட்டாகுமா? ஆகவே, அரசினரும் பொதுமக்களும் ஒருங்கு சேர்ந்து, நாட்டின் செல்வ நிலையை உறுதிப்படுத்த அரிதில் முயலுதல் இன்றியமையாததாகும்.

இலங்கை சுதந்திரத்தைப் பெற்றுவிட்டது உண்மையே: எனினும், பெற்ற இச்சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் விஷயத்திற் கையாளவேண்டிய இராசதந்திரங்கள் யாவையென்பதையும் ஆராய்ந்து நோக்க வேண்டும். இலங்கையரசினர் அயல்நாடுகளாகும் இந்தியா, பாக்கிஸ்தான், பர்மா, மலாயா, இந்தோனேஷியா முதலிய நாடுகளுடன் நிலையான நட்பும் நல்லிணக்கமும் பெற்றுக்கொள்வது எவ்வளவு இன்றியமையாத விஷயம்? நீடித்த காலமாக ஐரோப்பியரின் ஆதிக்கத்துள் இருந்துவந்தமையாற் போலும், இப்போது இலங்கையின் அரசியற் பாரத்தை ஏற்ற மந்திரிசபையினர், எல்லாவற்றிற்கும் ஐரோப்பாவையே முன் மாதிரியாக எதிர்பார்க்கின்றனர். அவசியமின்றி இந்தியாவுடன் பிணக்கும் விரோதமும் அடைகின்றனர். இந்திய அரசினரின் உயரிய அரசியல் நோக்கங்களை அறிந்தும், நமது மந்திரி சபையினர் தடுமாறுவது மிகவும் துக்கமான விஷயம். இலங்கையை இந்தியா விழுங்கிவிடுமென்று எண்ணுவதெல்லாம், சித்தப்பிரமையே. இலங்கை மாத்திரமல்ல, மற்றைய ஆசிய நாடுகளின் சுதந்திரத்தையும் காப்பாற்றும் பெலத்தையும் உரிமையையும் பெற்றிருப்பது இந்தியா என்பதை நன்கு அறியின், தற்போது ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தோன்றக் காரணம் இல்லையே.

---

## காந்தி தினம்

சிறப்பாக இந்தியாவுக்கும் பொதுவாக உலகுக்கும் இன்றைய தினம் மகத்துவம் வாய்ந்த தினமாகும். இந்திய மக்களின் அருமைத் தந்தையாகும் மகாத்மா காந்தியடிகள் அமர வாழ்வு எய்திய தினம். இந்தியர் மாத்திரமன்றி உலகின் மற்றைய பாகங்களிலுள்ளோரும் இத்தினத்தை . அன்புடனும் மன விசுவாசத்துடனும் கொண்டாடுவர். அஹிம்சையையும் உண்மையையும் அடிப்படையாகக்கொண்டு சுதந்திரப் போரை நடத்தி வெற்றி பெற்ற இப் பெரியாரை உலகம் என்றுதான் மறக்கும்? ஐரோப்பிய அமெரிக்க இராசதந்திரிகளும், அரசியல் நிபுணர்களும் இப்போது இம் மகாத்மாவையே நோக்குகின்றனர். உலக சமாதானம் நிலைபெறச் செய்வதற்கு மகாத்மாவின் போதனைகளன்றி வேறென்றும் உதவாதென்று இன்று நிச்சயமாக அறிந்துவிட்டனர். ஐக்கியநாடுகளின் சங்கமும் இப்போது இந்தியாவின் முதன் மந்திரியாகும் பண்டிதர் நேருவே தமக்குத் தஞ்சம் என்று கருதுகின்றது. இந்தியாவே உலக விவகாரத்தைத் தீர்த்து வைக்கவேண்டும் என்று எல்லா நாட்டு மக்களும் ஒரே மனத்துடன் கேட்கின்றனர். இதற்குக் காரணர் யாவர்? சாந்தமூர்த்தியாகும் மகாத்மாவே. மகாத்மாவின் அரசியற் கொள்கைகளை உலகிலுள்ள வல்லரசினர் சிரமேற்கொள்ளின் இப்போது பல்வேறு அரங்குகளிலும் தோற்றியுள்ள பிணக்குகள் வாக்குவாதங்கள் என்பன சூரியன்முன் பனிபோல் மறைந்துவிடாவா? நினைப்பதொன்றும், பேச்சொன்றும், செய்வதொன்றுமாக இந்நாடுகள் நடப்பதாற்ருன் எல்லாச் சங்கடங்களும் வந்தெய்தின. உலகம் மீட்சியடைய வேண்டின் மகாத்மா காட்டிய வழிச் சேறினன்றி வேறு தஞ்சம் எதுவுமில்லை. இதை இன்று எல்லா நாடுகளும் உணர்ந்துவிட்டன. மகாத்மா மறைந்தபின்னரே உலகம் அவரின் உண்மைப் பெருமையை அறியக்கூடிய நிலையை அடைந்தது. எதிர்காலந்தான் மகாத்மாவின் உண்மைப் பெருமையை நன்கறியக்கூடியதாக இருக்கும். மகாத்மாவின் ஆன்மா சாந்தியடைவதாக. இப் பெரியாரை மன அன்புடன் தாழ்ந்து வணங்குகின்ருேம்.


---

## ஓராண்டுச் சுதந்திரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமீபத்தில் டில்லியில் நடைபெற்ற ஆசிய மகாநாட்டின் போது, இலங்கையின் பிரதிநிதியாக விஜயம்செய்த மந்திரி பண்டாரநாயகா அவர்கள் ஒரு கூட்டத்திற் பேசும்போது, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பர்மா, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் இயற்கையாகவே ஒரு பாதுகாப்பு ஏற்பாட்டுக்குள் அமைந்துள்ளனவென்றும், அரசியல் துறையில் இந்நாடுகள் ஐக்கியமாக உழைக்க வேண்டியது அவசியமெனவுங் குறிப்பிட்டிருந்தார். இந்நாடுகள் அனைத்தும் ஒரே தேசிய, பொருளாதாரப போக்கையுடையன வெனவும் மந்திரி கூறியுள்ளார்.

சுதந்திரம் பெற்றுள்ள இலங்கையின் பொருளாதார நிலை நாளாந்தம் கவலைக்கிடமாகிக் கொண்டே வருகின்றது. வேலையற்ருேர் தொகை அதிகரிக்கின்றது. சாதாரண மக்களின் வாழ்க்கைத்தரம் செம்மையுறவில்லை. தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையும் மோசமாகவே யிருக்கின்றது. இவற்றுக்குப் பரிகாரந் தேடுவதே அத்தியாவசியமாகும். ஆடம்பர விழாக்களுடன் திருப்தியடையாது இலங்கையின் செல்வநிலையையும் மேம்படச் செய்வதே சுதந்திர [illegible] துங்கொள்ள [illegible] இருத்தல் வேண்டும்.




கூர்ச்சுதந்திரம், அரைச் சுதந்திரம் என்றெல்லாம் இலங்கை பெற்ற சுதந்திரத்தைப் பற்றி நாங்கள் பேசி வந்தோம். எங்களிற் சிலர் எழுதியும் வந்தனர், பெப்ரவரி 4-ந் திகதியுடன் சுதந்திரக் குழந்தைக்கு ஓராண்டு நிறைவு பெறுவதால், இனி இலங்கைக்கு முழுச் சுதந்திரம் கிடைத்துவிட்டதெனப் பலரும் கருதுவார்கள். ஆனல் ஸ்டாலின் மாமாவைக் கேட்டால் அவர், "போங்காணும் போம் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்திருக்கின்றதென்ருல் அது ஊமையன் கலியாணி இராகத்தில் ஆலாபனை செய்தான் என்று கூறுவதுபோல் அல்லவா இருக்கின்றது'' என்று சொல்லி நெருப்பெடுக்கின்ருர்!

சேர் ஒலிவருக்கு இச்சமாச்சாரத்தைத் தெரிவிக்கும்போது அவர் தான் பெற்ற சுதந்திரத்தைப்பற்றி மேல்ஸ்தாயியிற் பாடுகின்ருர் எனவும், கொழும்பு வானெலி இதை அஞ்சல் செய்துவருகின்றதெனவும் தெரிகின்றது.

### ஆசிரியருக்குப் பசை!

பள்ளிக்கூட ஆசிரியர்களும் இக்காலத்திற் கைலஞ்சம் பெறுகின்றனர் என அறிகின்றேன். இந்தியாவிலுள்ள புத்தகவியாபாரிமாருக்கு அங்கு விற்க முடியாத புத்தகங்களை இலங்கையிலுள்ள ஆசிரியர்கள் சிலர் விற்பனை செய்து கொடுக்கின்றனராம். இவர்கள் செய்யும் உதவியைப் பாராட்டுமுகத்தால் இவர்களுக்கு அவர்கள் பசை பூசினுல் இழுபடுவபர்கள்யார்?

விடை: பள்ளிக்கூட மாணவர்கள்.

### பத்திரிகைக்காரர்

பள்ளிக்கூட ஆசிரியர்களும் கைலஞ்சம் பெறுவதைச் சாட்டாகக்கொண்டோ என்னவோ, இக்காலத்திற் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் சந்தோஷமாகப் பல சாமான்கள் கிடைக்கின்றன.

பொடிபோடும் ஆசிரியருக்குத் தவருது பொடி அனுப்பிவந்தால் அவர் அப்பொடி தயாரிக்கும் வியாபார நிலையத்துச் சரக்கின் குணத்தைப்பற்றியும் மணத்தைப் பற்றியும் இலவசமாகத் தமது பத்திரிகையில் விளம்பரஞ் செய்துவிடுகின்ருர்.

பத்திரிகைஆசிரியர் ஆரைக்கீரைத்தைலம் வைத்துப் பழகியபேர்வழியானல், அதில் அவருக்கு ஒருசிசா பிரதி மாதமும் இலவசமாகக் கிடைக்கின்றது. ஆசிரியரும் பத்திரிகையில் அதைப்பற்றி இலவச விளம்பரஞ் செய்வதுடன் நில்லாது ஏனையோருக்கும் சிபார்சு செய்துவிடுகின்ருர்.

இதில் இன்னுமோர் வேடிக்கையிருக்கின்றது. அதாவது நறுக்காகப் பத்திரிகை நடாத்துபவர்கள் விளம்பரங்களுக்குப் பணம்பெற முடியாது புறுபுறுத்தவண்ணம் 'புறாவ்' பார்க்கும் அழகுதான் அது.

### பந்தம் பிடித்தல்!

காக்காக் குஞ்சுக்குக்
  கலியாணம்
காசுக்கு இரண்டு
  பணியாரம்
காவடி யோட்டம்
  தேரோட்டம்

என்று அந்தக் காலத்தில் நாங்கள் பாடியோடிய பாடல் இன்றுந்தான் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. சுதந்திரவிழாவை முன்னிட்டு நடைபெறும் ஓட்டத்திற் பங்குபற்றும் வாலிபர்களும் இந்தப் பாட்டைப் பாடிக்கொண்டு குடல் தெறிக்க ஓடலாம். இவர்கள் பந்தங்களையும் கையிற்கொண்டு ஓடுவார்களாம். ஆனபடியால் யூ: என். பி.க்குப் பந்தம் பிடிப்பவர்கள் என்றும் வெறுங் காவடிகள் என்றும் இவர்களைப் பார்த்து ஒருவரும் பரிகசிக்கமாட்டார்கள். ஏனெனிற் சுதந்திரம் காகக்குஞ்சுக்கு மாத்திரமல்ல; இலங்கை மக்கள் அனைவருக்குந்தான் இச் சுதந்திரம் கிடைத்திருக்கின்றது.

### குரல் ஒலி!

பிரதிநிதிகள் சபையிலுள்ள எங்கள் அங்கத்தினரின் பேச்சுக்களை ஒலிபரப்பியினுல் வீட்டிலே இருந்தவண்ணம் பெண்கள்கூடக்கேட்டு அனுபவிக்கலாம் என்றயோசனை பிரதிநிதி ஒருவருக்கு உண்டாகியிருக்கின்றது. இவர்கள் அங்குபோடும் சத்தத்தை எதற்காக வீட்டிலும், தெருவிலும் உள்ளவர்கள் கேட்கவேண்டும்? தவிர, காலிப்பிரதிநிதியின் குரல் உக்கிரமாக இருந்தால் ரேடியோ சில சமயத்தில் வெடித்துவிடவுங்கூடுமல்லவா?

### இரு பெரியார்கள்

சமீபத்திற் பத்திரிகை உலகு இரு பெரியார்களை இழந்தது. ஒருவர் சென்னையைச் சேர்ந்த ஜி. ஏ. நடேசன் அவர்கள். மற்றவர் எஸ். ஏ. பிரெல்வி என்பவர். இவர் வட இந்தியாவாசியாவர். இந்தியன் ரிவியூ என்ற ஆங்கில மாத வெளியீட்டின் மூலம் ஸ்ரீ நடேசன் தாய்நாட்டுக்குச் சேவை செய்தார். ஜனுப் பிரெல்வி முஸ்லிம் தேசபக்தராகவிளங்கிப் பம்பாய் க்ரோனிக்கிள் என்ற சிறந்த ஆங்கிலத் தினசரிவாயிலாகத் தாய் நாட்டின் அடிமைத் தளைகளைத் தகர்த்தெறியும் பணியில் ஈடுபட்டார். இவ்விரு பெரியார்களின் சேவைகளையும் யார்தான்மறக்கமுடியும்?

---

### நினைவு

பத்தினி யேயமிர் தாதேவி
  நாமநற பைங்தொடியே!
இத்தரை மீதி லுனைப்பிரிந்
  தோராண் டிகந்ததுநின்
வித்தக மக்கள் விருப்போ
  டுளநைந்து வேகுதுயர்
அத்த னடியுன்னி அன்புமலர்
  தூவி யாற்றுதுமே.

ச. பேரின்பநாயகன்
மானிப்பாய், 30-1-49

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவின் தீர்மானம்

## தென்னாபிரிக்கா திமிர்

**புது** டில்லியில் இந்தியப் பிரதமர் நேருஜி கூட்டிய ஆசிய மகாநாடு ஆசியாக் கண்டத்தின் புதிய சகாப்தத்தை ஆரம்பித்து விட்டது. இதுவரையும் உலகத்தின் தலைமையை ஐரோப்பியரும் அமெரிக்கருமே நடாத்தி வந்தனர். இனி அப்படிச் செய்ய இயலாது. ஆசிய நாடுகள் விழித்தெழுந்து விட்டன. இற்றைக்கு இரண்டு வருடங்கட்கு முன் ஆசியநாடுகளின் மகாநாடொன்று கூட்டப்பட்டபோது அநேகர் இப்போதைய திடமான நிலையை அது அடையுமென்று எண்ணவில்லை. பண்டித நேருவின் ஆழ்ந்த அரசியல் ஞானமும் ஆற்றலும் புகழற்பாலது. ஐரோப்பிய வல்லரசினரின் ஏகாதிபத்தியக் கொள்கைகட்கு இனி இடமில்லையென்பதை நேருஜி நன்கு புலப்படுத்திவிட்டார். ஒல்லாந்தரின் ஒவ்வாத முறையைக் கண்டிக்கவே இப்போது இம் மகாநாடு கூட்டப்பட்டது. இந்தியப் பிரதமருக்கு உலகில் முன்னரிலும் பன்மடங்கு மதிப்பு ஏற்படலாயிற்று. அவர் இம் மகாநாட்டினை நடத்திய முறையைப் புகழாதாரில்லை. மூன்று பெரிய உண்மைகளைப் பிரதமர் நேருஜி உலகறிய வெளியாக்கினர். (1) சுதந்திரமென்பது சமாதான வாழ்வாகும். (2) ஐக்கிய நாடுகள் சங்கத்துக்கு ஆசிய மகாநாடு மாறானதன்று; அது அதற்கு உறுதுணையானது. (3) சாதித் திமிருடன் இம் மகாநாடு ஐரோப்பியருக்கு எதிராகக் கிளம்பவில்லை. இந்தோனேஷியாவின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவே எழுந்தது. பண்டிதரின் தாராளமான மனப்பான்மையையும் மேற்படி மகாநாட்டினை நடத்தி வைத்த திறமையையும் அமெரிக்க ஆங்கில அரசியல் வாதிகள் பெரிதும் மெச்சினர்.

### பெரியார் சாப்ரூ

சென்ற வாரம் இந்தியப் பெரியாரொருவர் காலஞ்சென்றதனால் நாடு முழுவதும் துயர்க் கடலில் ஆழ்ந்தது. பெரிய அரசியல் மேதாவியும் நிகரற்ற சட்ட நிபுணருமாகிய டொக்டர் ரீ. பி. சாப்ரூ அவர்களை அறியாதார் கிடையாது. இந்தியாவில் தாராளக் கட்சியைச் சேர்ந்தவராயிருந்தும் காங்கிரஸ் தலைவர்களது மதிப்பினை அதிகம் பெற்ற மிகமிகச் சிலருள் இவரே சிரேட்டமானவர். அரசியற் போராட்டங்கள் நடந்தபோதெல்லாம் அரசினருடன் சமரசப்பேசி இணக்கங்களை ஏற்படுத்துவதிற் சிறந்தவர். பிரிட்டிஷ் அரசினரும் இவர்மாட்டு அளவுகடந்த மதிப்பு வைத்திருந்தனர். முதலாவது இரண்டாவது வட்டமேசை மகாநாடுகளில் மகாத்மா காந்தியடிகளையும் மற்றைய தலைவர்களையும் பங்குபற்றச் செய்தவர் இவரேயாவர். இராசப் பிரதிநிதி இர்வின் பிரபுவுடன் மகாத்மாவைச் சந்திக்கவைத்து சத்தியாக்கிரகப்போரைப் பின்போடச் செய்தவரும் இவரேயாவர். இந்திய சுதந்திரத்தில் அளவு கடந்த ஆர்வமுடையவர். இந்தியாவுக்காகப் பலவழியிலும் இடைவிடாது உழைத்தவர். இப்பெரியாரின் ஞாபகம் என்றும் அழியாது நிலவும் என்பதில் ஐயமேகிடையாது.

### பிழையான கொள்கை

வேலைநிறுத்தம் இந்த அரிய சந்தர்ப்பத்தில் நிற்பாட்டப்பட வேண்டுமெனப் பண்டித நேரு முதலிய காங்கிரஸ் தலைவர்கள் பன்முறை கோரியும், அதைக் கவனியாது தொழிலாளர்கள் பிழையாக நடந்துகொள்கின்றனர். சுதந்திரம் பெற்ற இந்தியாவில் தோற்றிய பல்வேறு சங்கடங்களைப் புதிய அரசினர் சமாளிக்க வேண்டியிருக்கும் இச்சமயத்தில், வேலை நிறுத்தங்கள் இடைவிடாது ஆரம்பிப்பது தகாது. காங்கிரஸ் ஸ்தாபனத்தின் மனப்பீதியடைந்த தலைவர்கள் தமது ஆத்திரத்தைத் தீர்க்கவே ஒன்றுமறியாத தொழிலாளரை ஆட்டியலைக்கின்றனர். தாங்கள் தலைமையையும் கடப்பிடியையும் பெற்றாற் போதும், நாடு எக்கேட்டினையடையினும் நமக்கென்ன என்று போலும் இப் போலித் தலைவர்கள் கருதுகின்றனர். சாமானிய தொழிலாளர் மாத்திரமன்று, சர்வகலாசாலை மாணவர்கள்கூட வேலை நிறுத்தஞ்செய்ய ஆரம்பித்துவிட்டனர். தங்களைப் பரீட்சைக்கு விடவில்லை யென்பதற்காக நூற்றுக்கணக்கான மாணவர் கல்கத்தாவிலே கல்லூரிகளுக்குச் செல்லாது வேலைநிறுத்தஞ் செய்தனர். அத்துடன் நில்லாது கலகஞ்செய்து காயங்களும் அடைந்தனர். வேலைநிறுத்தம் எல்லா விஷயத்துக்கும் கையாளலாகுமா? போலித் தலைவர்கள் இவ்வித இயக்கங்களை ஆரம்பித்து தாம் தலைமையைப் பெறலாமென நம்பி நாட்டினைப் பாழ்நிலையடையும்படி செய்கின்றனர்.

### இதுவும் இராசதந்திரம்!

தென்னாபிரிக்காவில்ஏற்பட்ட பெரிய கலகத்தைப் பற்றிய உண்மையான விபரம் இப்போது கிடைத்துள்ளது. தென்னாபிரிக்கா வெள்ளையர் அங்கு வசிக்கும் காப்பிரிச் சாதியினரை உபாயத்தால் தூண்டி இந்தியர்க்கு மாறாக எழும்படி செய்தனர். இந்தியரைப் போல் தாமும் அங்கு அடிமைகளாக இருப்பதை இச்சாதியினர் மறந்தது பெரிய துக்கமாகும். இவ்விரு வகுப்பினர்க் கிடையிலும் கலகத்தை மூட்டிவிடின் அரசியலை நடத்துவது இலகுவாகுமென்று அந்நாட்டு வெள்ளையரின் உட்கிடக்கை. ஆங்கிலேயருக்குத்தான் பிரித்தாளும் முறை நன்கு கைவரும் என உலகு எண்ணிற்று. ஆனால் தென்னாபிரிக்கா வெள்ளையரும் அவருக்கு விட்டுக்கொடுக்க மாட்டாராகக் காணப்படுகின்றனர். பிரிட்டிஷ இராசதந்திரத்தில் நெருங்கிய பயிற்சியுடைய தென்னாபிரிக்கா வெள்ளையர் இப்படிச் செய்யாது எப்படி விடுவர்? இந்தியருடன் சேர்ந்துழைத்துத் தமது சுதந்திரத்தைப் பெறுவதே ஏற்ற முறை யென்பதை தென்னாபிரிக்கா வாசிகள் உணரவில்லை. இந்தியரை அங்கிருந்து ஓட்டிவிடின் தமக்குச் சுதந்திரம் வருமென இவர்கள் மனப்பால் குடிக்கலாம். இந்த வெள்ளையர் இக் கருப்புமனிதரை என்றும் அடிமைகளாக வைத்திருக்கலாமென்று எண்ணுகின்றனர். இந்தியர் தென்னாபிரிக்காவில் இடம்பெறின் அவர்களின் உள்ளத்தைப் பழுதாக்கி விடுவாரென்று வெள்ளையர் அஞ்சுகின்றனர். இதை இந்த மனிதர் அறிந்தாரில்லை.

**- இந்தியா -**

### எச்சரிக்கை!

இந்தியா சுதந்திரம் பெற்றுவிட்டது; தாம் இனி எதையும் செய்யலாம், என்று எண்ணுபவர்க்கு வல்லபாய் படேல் கூறும் புத்திமதி மெச்சப்படவேண்டியது. நாட்டின் பல பாகங்களிலும் இடைவிடாது நடைபெறும் கலகங்களையும் வேலை நிறுத்தங்களையும் நோக்கி அவர் கூறுவதாவது: "இந்தியாவில் வாக்குவாதமும், வகுப்புக் கலகங்களும், அமைதியின்மையும் என்றும் இடைவிடாது நடந்துகொண்டிருப்பின் இந்தியாவினை நாம் உயர்நிலைக்குக் கொண்டு வருவது எப்படி? கல்கத்தாவில் மாணவர் செய்யும் அடாத செயலைப் பாருங்கள் ஐந்து வருடங்கட்கு மாத்திரம் இடந்தரும்படி நாங்கள் கேட்டும் அவர்கள் உடன்படுகின்றாரில்லை. சமஸ்தானங்கள் யாவும் இந்திய சமட்டியில் சேரவேண்டும். ஒன்றிரண்டொழிந்த ஏனைய சமஸ்தானங்கள் சேர்ந்துவிட்டன. ஒற்றுமையும் உறுதியுமான அரசியலும் இந்தியாவில் ஏற்படினன்றிப் புதிய நிர்வாக ஒழுங்குகளைச் செய்து முடிப்பதெப்படி? பொருளாதார நிலையை உறுதிப்படுத்தத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றவும் இந்தியாவில் அமைதி வேண்டுமன்றோ. மகாத்மா காந்தியின் போதனையை மேற்கொண்டு நடப்பின் இந்தியாவில் பஞ்சம் தலைகாட்ட வழியில்லை. யாவரும் திருப்தியடைய இடமுண்டு. எல்லாவற்றிலும் நம் நாடு சுதந்திரமடைந்துவிடும்."


# திருமண அழைப்பு

நிகழும் சர்வதாரி௵ தைமீ உக-ங்வ (4-2-49) வியாழக்கிழமை இரவு 3 மணி 37 நிமிஷத்தின்மேல் வருஞ் சுபமுகூர்த்தத்தில் எமது புதல்வி திருவளர் செல்வி இராஜராஜேஸ்வரி அம்மாளை புன்னாலைக் கட்டுவன் திரு. ஆ. சங்கரப்பிள்ளை அவர்களின் புதல்வன் திருவளர்செல்வன் *S. V.* முதலியார் அவர்களுக்குத் திருமங்கல்யதாரணஞ்செய்ய நிச்சயித்திருப்பதால், இத் திருமண வைபவத்திற்கு எமது பந்துமித்திரர்கள் சமுகந்தந்து மணமக்களை ஆசிர்வதித்துச் சிறப்பித்துச் செல்லுமாறு வேண்டுகிறேன்.

அடுத்தநாள் (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 4 மணிக்கு எமது இல்லத்தில் உபசரணைக்கொண்டாட்டம் நிகழும்.

மயிலிட்டி
காங்கேசன்துறை, 29-1-49
[3599]

சி. சுவாமிநாதன்


### நேதாஜி வருவார்

**ஸ்ரீ** யு. முத்துராமலிங்கத் தேவர் நேதாஜியின் 53-வது ஜெயந்தி விழாவிற் பேசும்போது நேதாஜிக்கும் தனக்கும் தொடர்பு இருப்பதாகவும், அவர் உயிரோடு இருக்கிறார் எனவும் தெரிவித்தார்.

**ART GALLERY: கலாமண்டபம்:** பிரசுரம்: அகில இந்திய காதி சுதேசி—பொருள்காட்சியின் கலைப்பகுதி நிர்வாகசபையினர், காங்கிரஸ்நிலையம், தேனும்பேட்டை சென்னை 6. விலை அணா 6. தபாற்செலவு வேறு.

சித்திரங்கள் நிறைந்த இச் சிறுமலர் உண்மையாகவே பெரும் பொருள் அடங்கியதொன்று. இந்தியாவில் உண்மைக் கலைக்கு ஆற்றல் இருக்கிறதென்பதை இது புலப்படுத்துகிறது. ஸ்ரீ P. V. ராஜமன்னர் கூறியதுபோல, சிற்ப உருவத்தின் நிலை பழங்கால நிலையைப் போலல்லாது நிலைமை இப்பொழுது மிகவும் குன்றியிருக்கிறதென்றே சொல்ல வேண்டும். இச்சித்திரங்களில் முக்கியமாக, ஸ்ரீ பணிக்கரின் இளந் தாய் என்ற எண்ணெய் வர்ணப்படமும், ஸ்ரீ போல்ராஜின் சந்தை மூலை என்ற தண்ணீர் வர்ணப் படமும் முக்கியமாகப் போற்றத்தக்கன. இது வர்ணச் சித்திரங்களுஞ் சேர்ந்த அழகிய ஆங்கில வெளியீடாகும்.

இவ்வகையான சித்திரக்காட்சிகள் ஏற்படுத்தி இந்தியாவிலுள்ள கலை நுணுக்கங்களை உலகத்திலுள்ளவர்கள் எல்லோரும் அறிய ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்தியதற்கு, கலாமண்டபக் காரியதரிசி ஸ்ரீ விநாயகத்திற்கு நாமெல்லோரும் கடமைப்பட்டிருக்கிறோம். —சாரு.

**கலாமண்டபம்:** விமர்சனம். ஆசிரியர்: தொ. மு. பாஸ்கரதொண்டைமான். பிரசுரம்: காங்கிரஸ் நிலையம், தேனும்பேட்டை, சென்னை. விலை அணா 1.

சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற காதிப் பொருட்காட்சியில் அமைக்கப்பெற்ற கலாமண்டபம் என்ற கலைக் கோயிலின் சிறப்பையும் வனப்பத்தைக் கவின்பெற அணிசெய்த அழகிய சித்திரங்களைப்பற்றியும் கலைக்கண்கொண்டு பார்த்த ஸ்ரீ தொண்டைமான் அவர்கள் அதன் இன்பத்தைத் தமது விமர்சனம்மூலம் சாதாரண மக்களுக்கும் இப்பிரசுரத்தில் எடுத்துரைக்கின்றார்.



## நமது வாசிகசாலை

**கலைக்கதிர்:** மாத வெளியீடு. ஆசிரியர்: ஜி. ஆர். தாமோதரன் B. Sc.: A. M. I. E. E. விலாசம்: பூளைமேடுபோஸ்ட் கோயமுத்தூர். ஆண்டுச் சந்தா ரூபா 6-0-0.

கலைவளம் மிகுந்த இக்காலத்திற் கலைவளம் பெருகச்செய்வதே இச் சீரிய பத்திரிகையின் நோக்கமாகும். அறிஞர்கள் பலரின் அறிவிலும் உணர்விலும் விளைந்த இக் கதிர், மக்களின் அறிவுக் களஞ்சியத்தை நிரப்பும் பெற்றி வாய்ந்ததாக இருக்கின்றது. கவிமணி, திருவாளர்கள் ரா. பி. சேதுப்பிள்ளை, எஸ். வையாபுரிப்பிள்ளை, ஆ. முத்துசிவன், நாமக்கல் கவிஞர்போன்ற கலைஞர்கள் உட்பட வேறும் பலர் இதற்கு அரிய விருந்து விஷயங்கள் எழுதிவருகின்றனர்.

நமது வாசிகசாலையில் விமர்சனத்திற்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதனைக் கவனிப்பாராக.

ஆசிரியர் தாமோதரன் அவர்கள் தமிழ் மக்களின் சிந்தனைக்கு நல் விருந்தாகக் கலைக் கதிரைத் தயாரித்து வருகின்றார். நல்லதாளில் அழகான அச்சு வேலைகளுடன் கலைக்கதிர் வெளியாகி வருகின்றது.

**திரை உலகம்:** பொங்கல் இதழ். ஆசிரியர்: டி. கே. கோவிந்தன். 52, ஜாபர்சா தெரு, திருசிராப்பள்ளி. தனிப்பிரதி விலை அணா 4.

**டமாரம்:** பொங்கல் மலர். 1949, சிறுவர்க்கான பத்திரிகை. ஆசிரியர்: சுப. சொக்கலிங்கம். விலாசம்: புதுக்கோட்டை விலை அணா 4.

### பின்வந்த நூல்கள்

**கால்நடைகளின் பராமரிப்பு:** ஆசிரியர்: டொக்டர் வி. ஆர். கே. செட்டியார். விலாசம்: இராமவர்ம்புரம் புதூர், கொழிஞ்சாம்பாறை P. O. விலை ரூபா 1-4-0.

1. தியானமும் வாழ்க்கை உயர்வும். 2. கடவுளும் வாழ்க்கை நலமும். 3. உலக நன்மையே ஒருவன் வாழ்வு. 4. மக்கள் வாழ்க்கைத் தத்துவம். 5. வாழ்க்கை இன்பம். இந்நூல்களின் ஆசிரியர்: கா. சுப்பிரமணியப்பிள்ளை எம். ஏ., எம். எல்., 6. உலகிருள் நீக்கிய உத்தமர். 7. பொதுநலப் புரவலர். இவ்விரு நூல்களின் ஆசிரியர்: வித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை. பிரசுரம்: உமாதேவன் கம்பெனி 16 செம்புதாஸ்தெரு, சென்னை.

### வெற்றிகண்ட டில்லி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொகையினர் வேலையின்றித் திண்டாடுகின்றனர். புதன்கிழமை (19-1-49) வேலையற்றோர் கூட்டமொன்று சுலோகங்கள் பொறிக்கப் பெற்ற மட்டைகளைச் சுமந்த வண்ணம் கோட்டை வீதிகளில் ஊர்வலமாகத் திரிந்து ஆரவாரித்தது. 80,000 பேர் வேலையற்றுத் திண்டாடுகின்றனர். ஆனால் அரசாங்கமோ இன்னும் யோசனை செய்துகொண்டே இருக்கின்றதென்ற வாசகமும் அங்குதென்பட்டது ஒலிபப்ரபுக!

பிரதிநிதிகள் சபையிலுள்ள கலரிகளிற் போதிய இடமில்லை யென்பது பலரும் அறிந்த விஷயம். ஆகவே. காலிப் பகுதிப் பிரதிநிதி இந்த "இடநெருக்கடி"யைத் தீர்த்து வைப்பதற்கு முனைந்திருக்கின்றார். பிரதிநிதிகள் சபை நடபடியை ஒலிபரப்பினால் வெளியில் இருப்பவர்களும் கேட்கலாமென்பதே அவர் கூறும் யோசனை. பிரதிநிதிகள் சபை அடுத்த மாதம் 16-ந் திகதி கூடும்போது இதனைப் பிரேரணை முறையில் ஸ்ரீ தஹநாயகா சமர்ப்பிப்பார்.

### பரவைக் கடலுக்குப் பலி

**ஹாயி பரிதாப முடிவு**

கடந்த வெள்ளிக்கிழமை (21-1-49) வடமாகாணத்திற்கு விஜயம் செய்த தெங்குப் பொருள் விசாரணைச் சபையைச் சேர்ந்த சுருக்கெழுத்தாளரும் வெள்ளவத்தை வாசியுமான 39 வயதுள்ள ஸ்ரீ என். டபிள்யு. ஹாயி சென்ற செவ்வாய்க்கிழமை மாலை ஆனையிறவிலுள்ள பரவைக் கடலில் மூழ்கி மரணமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீஸ்வரம்

### பழம் பெரும் ஸ்தலம்

சைவ நன்மக்களால் மிகவும் சிறந்தனவாக மதிக்கப்படும் திவ்ய க்ஷேத்திரங்களுள் திருக்கேதீஸ்வரமும் ஒன்றாகும். இது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மும்மையாலும், மிகப்புராதன காலந்தொட்டே சிறந்து விளங்குகின்றது.

விஜயராசன் இலங்கைக்கு வந்த காலத்திற்கு முன்புதொட்டே சிவனடியார்கள் இத்திவ்ய ஸ்தலத்திற்கு யாத்திரை புரிந்து சுவாமி தரிசனஞ் செய்து வழிபட்டு வந்தனர். இத்தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கேதீஸ்வரப்பெருமானையும் இங்குள்ளபாலாவித் தீர்த்தத்தினையும் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், தாம் அருளிச்செய்த தேவாரத்திருப்பதிகங்களிற் போற்றித் துதித்திருக்கின்றனர்.

அக்காலத்தில் இவ்வாலயம். இராமேஸ்வரத்திலிருக்கும், திருக்கோவிலைப்போன்று பிரமாண்டமானகட்டடங்களை உடையதாக விருந்தது.

சோழர்கள் இலங்கையில் அரசுபுரிந்த காலத்தே இவ்வாலயத் திருப்பணி வேலை கருங்கல்லால் நடைபெற்றதாகவும், சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அக்காலத்தே பாரத நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் ஈழநாட்டின் பிறபாகங்களிலிருந்தும் சைவ நன்மக்கள் திருக்கேதீஸ்வரத்துக்கு யாத்திரை புரிந்துவந்தனர்.

பல நூற்றாண்டுகளுக்குப் பின் திருக்கேதீஸ்வரத்தைப் பழைய பெருமையுடன் விளங்கச் செய்ய இன்று முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. சென்ற வெள்ளிக்கிழமை (28-1-49) திருக்கேதீஸ்வரத்தில் கொண்டாட்டம் நடைபெற்றது. இத தலத்திற்கு யாத்திரை புரியும் அடியார்களின் வசதிக்காக ஆரம்பிக்கப்பட்டமடத்தின் ஒரு பாகத்துத் திருப்பணி வேலையும் முற்றுப்பெற்று, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மடம் என்றும் பெயர் சூட்டப்பெற்றது. அன்று ஆலயத்தில் விசேடபூசையும், தோத்திர பாராயணமும் சமயப் பிரசங்கங்களும் நடைபெற்றன. அன்றைய தினம் இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள சைவ நன்மக்கள் இவ்விழாவிற் பங்குபற்றினர்.

## பரந்தன் கமக்காரர் சங்கம்

பரந்தன் அரசினர் பாடசாலை மண்டபத்தில் மேடி கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சங்கத்தலைவர் ஸ்ரீ. வி குமாரசுவாமி. எம். பி தலைமையில் ஆரம்பமாயிற்று.

பின்னர் உதவிமாகாண அதிபர் ஸ்ரீ. இராசரத்தினம், வட பகுதிக் கிருஷிகத் தலைவர் திரு. துரைசிங்கம், இரணைமடு நீர்ப்பாய்ச்சற் பகுதி உத்தியோகத்தர் ஸ்ரீ. நடராசா, கிருஷிகப் பகுதிப் பிரசார உத்தியோகஸ்தரான ஸ்ரீ. ஜெபரத்தினம் ஆகியோர் விவசாயம் நெற்செய்கை சம்பந்தமான சொற்பொழிவுகள் ஆற்றினர். —கடிதம்.

## கடதாசித் தொழிற்சாலை

### நாவற்குடாச் சங்கம்

மட்டக்களப்புப் பகுதிப் பிரதிநிதிகள் சபை அங்கத்தவர் ஜனாப் ஏ. சின்னலெவ்வை அவர்கள் "இலங்கையிலேயே முதலாவதும் 200 தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடியதும் சுமார் 10 இலட்ச ரூபாய் செலவிலுமாகக் கல்லடியில் ஓர் கடதாசித்தொழிற்சாலையும், 25 தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய தச்சு வேலைத் தொழிற்சாலை நாவற்குடாவிலும் கட்டுவதற்கு இன்னும் சில மாதங்களில் வேலை ஆரம்பிக்கப்படும். அரசாங்க உத்தியோகத்தர் 57 பேருக்குக் கல்லடியிற் கடற்கரையை அடுத்து வீடுகள் கட்டவேண்டியிருப்பதனால் கடற்கரை வரையும் கல்லடி ரோட்டுப் போடப்படும். உன்னிச்சைக் குளத்துநீர்த் தேக்கத்தை உயர்த்துவதற்காக அக்குளத்துக் கட்டுவானை இரண்டடி உயர்த்தவும் அக்குளத்திலிருந்து செல்லும் 22 மைல் நீளமான வலது கை வாய்க்காலை வெட்டித் திருத்தவும் அரசினர் உறுதி கூறியுள்ளனர்" என நாவற்குடாக் கிராம முன்னேற்றச் சங்கத் திறப்பு விழாவின்போது குறிப்பிட்டார்.

மேடி சங்கத் தலைவர் ஸ்ரீ இ. இராசையா அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவர் பேசும்போது சங்கத்தின் திட்டங்கள் சிலவற்றை எடுத்துரைத்தார்கள்.

கிழக்கு மாகாண அதிபர் ஸ்ரீ. டி. வி. ஆர். குணவர்த்தன அவர்கள் தற்போதுள்ள கிராம முன்னேற்றச் சங்கத்தினதும், இதற்கு முன்னிருந்த கிராம முன்னேற்றச் சங்கத்தினதும் பலாபலன்களை விளக்கிக் கூறியதோடு அச்சங்கமானது கிராமத்துக்கு மிகவும் அவசியமான தேவைகளை மாத்திரந்தான் அரசினரிடம் கேட்கவேண்டும்; அப்படியானவற்றைத்தான் செய்து கொடுக்க முடியும் எனக் குறிப்பிட்டார்.

மண்முனை வடபகுதி இறைவரியதிகாரி ஸ்ரீ செல்வரத்தினம் அவர்கள் கிராமத்தவரின் ஒற்றுமையைப் பற்றியும், கிராம முன்னேற்றச் சங்கத்தின் பலாபலன்களைப்பற்றியும் விளக்கிக் கூறினார்கள்.

ஸ்தலஸ்தாபனப் பகுதி அதிகாரி ஸ்ரீ ஏச். இஸ்மாயில் அவர்கள் சனசமூக சங்கமும், கிராம முன்னேற்றச் சங்கமும் ஒற்றுமையாக நடக்கவேண்டிய அவசியத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்.

ஸ்ரீ. எம். வைரவப்பிள்ளை, ஸ்ரீ எம். இராமச்சந்திரன் என்பவர்களும் குறித்த சங்கத்தின் நோக்கங்களை செய்யவேண்டியச் வேலைகளைப்பற்றியும் பேசினார்.

ஈற்றில் ஸ்ரீ ரீ. கிருஷ்ணபிள்ளை ஆசிரியர் அவர்கள் நாவற்குடாவின் பூர்வ சரித்திரத்தினையும், பூநொச்சிமுனைக் கிராமத்தவரின் போக்குவரவின்மையாலுண்டான தடைகளையும் விளக்கிக் கூறியதோடு சபையோர்க்கு நன்றியுரை கூறினார்.

## ஸ்ரீ கிருஷ்ணதாஸ் கமத்

### யாழ்ப்பாணம் வருகின்றார்

இந்திய அரசினரின் விவசாய மந்திரியாரின் ஆலோசகராகிய ஸ்ரீ கிருஷ்ணதாஸ் கமத், சமீபத்தில் யாழ்ப்பாணம் விஜயம் செய்வார். இவர் காரைநகர் கிராமப் புனருத்தாரண சபையின் தலைவரான, ஸ்ரீ பி. நவரத்தினம் எம். ஏ. அவர்களின் அதிதியாகத் தங்கி நிற்பார். இவருடைய பேச்சுக்களைக் கேட்க விரும்புபவர்கள் சபைச் செயலாளருக்கு எழுதி ஒழுங்குகள் செய்துகொள்ளலாம். சொற்பொழிவுகள் நடைபெறும் இடம், நேரம் என்பன பின்னர் தெரிவிக்கப்படும்.

## விமானத்தபால்

### காங்கேசன் துறை — சென்னை

அடுத்த மாதம் ஆரம்பத்தில் காங்கேசன்துறையிலிருந்து சென்னைக்கு நேராகத் தபால்கள் அனுப்பப்படும். ஞாயிறு, திங்கள், புதன் வெள்ளி சனி ஆகிய தினங்களில் சென்னைக்கும், செவ்வாய் வியாழன் ஆகிய இருநாட்களில் காங்கேசன்துறையிலிருந்து திருச்சிக்கும் விமான மார்க்கமாகத் தபால் அனுப்பபடும்.

## காந்திஜி கொலைவழக்கு

### 10-ந் திகதி தீர்ப்பு

காந்திஜியின் கொலைவழக்குச் சம்பந்தமான விசாரணை முடிவடைந்துவிட்டது. தீர்ப்பு அடுத்த மாதம் 10-ந் திகதி அளிக்கப்படுமெனத் தெரிகிறது.

## நாவற்குடா கிராம முன்னேற்ற சங்கம்

நொச்சிமுனை, நாவற்குடா, மஞ்சந்தொடுவாய், ஆகிய மூன்றுகிராமங்களையும்இணைத்து ஓர் கிராம முன்னேற்றச் சங்கம் ஆரம்பிப்பதற்கு 31-12-48-ல் நியாயதுரந்தரர் இ. இராசையா அவர்களின் தலைமையில் ஸ்ரீ இராமச்சந்திரா அவர்களால் பிரசாரக் கூட்டம் நாவற்குடா அரசினர் பாடசாலையில் நடாத்தப்பட்டது. பின்னர் சுவாமி நடராஜாநந்தர் அவர்கள் தலைமையில் மேற்படி சங்கம் ஆரம்பமாயது. தலைமை உரையில் சுவாமிஜீ அவர்கள் வார்தாக்கல்வித் திட்டத்தினையும் அத் திட்டத்தினைக்கொண்டு சென்னைக் கல்வி மந்திரி அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் கோயமுத்தூரில் நடாத்தும்மாதிரிப் பாடசாலைகளின் வேலைகளையும் மட்டக்களப்பு முஸ்லீம்களின் பொருளாதார நிலையினையும் விளக்கிப் பேசினார். —கடிதம்,

## குத்தகை விளம்பரம்

யாழ்ப்பாணம் பெரிய (டிஸ்திறிக்) கோட்டு உத்தரவின்படி பின்னூற்சொல்லப்பட்ட காணிகள் குத்தகைக்குக்கொடுக்கப்படும்:-

(1) உடுவில் உடையார் கலட்டி என்னும் காணி—18 பரப்பு. எல்லாம் பனை.

(2) சுன்னாகத்தில் 'வலிநங்கை' என்னும் காணி ஒரு பரப்பு. வெறும் நிலம்.

(3) சுன்னாகத்தில் 'அம்பனை' என்னும் காணி. —2½ பரப்பு—பனை.

(4) உடுவில் 'கோட்டை வயல்'—7 நெற்பரப்பு

(5) உடுவில் 'கட்டு வயல்' — 3 பரப்பு

(6) உடுவில் 'புங்கட்டி வயல்' 5¼ பரப்பு.

(7) உடுவில் 'கமட்டான் வயல்' — 9 பரப்பு.

2. இந்தக்குத்தகைகள் 3 வருஷத்துக்குத்தான். ஒரு முறையிற் கொடுக்கப்படும்.

3. குத்தகை எடுக்க விரும்புவோர் ஒவ்வொரு காணிக்குப் புறம்பாக அல்லது எல்லாக் காணிக்கும் என்ன குத்தகை கொடுப்போமென்று மாசி மாசம் 28-ம் திகதிக்கு முன், கீழே கையொப்பமிட்ட 'சுப்பிறிம் கோட்'டுப் பிறக்கிருசி அவர்களுக்கு எழுதிக் கேட்டுக்கொள்ளலாம்.

ச. கனகசபாபதி
(பிறக்கிருசி)
மல்லாகம், சுன்னாகம்
23-3-49.

[3597—ii]

## இருவாலிபர்கள்

### நீரில் மாண்டனர்

காலி வாசியான ஸ்ரீ என். திறிங்கொடா என்ற வாலிபனும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நடராஜா என்ற வாலிபனும் வெரங்தோட்ட வாடிவீட்டுக் கருகாமையாற் பாயும் மகாவலிகங்கையில் நீராடும்போது மூழ்கி மாண்டனர் இருவரும் மினிப்பே நீர்ப்பாசனப்பகுதியில் லிகிதர்களாகப் பணியாற்றி வந்தனர். இது சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சம்பவமாகும். இவர்களின் பிரேதங்கள் இன்னும் அகப்படவில்லை.

## மார்படைப்பால் மரணம்

மலாயாவில் ஓவசியராக இருந்த ஸ்ரீ கந்தர் சிதம்பரப்பிள்ளை சென்ற புதன்கிழமை தனது மகனுடன் தனக்குரித்தான பென்ஷன் பணத்தைப் பெறுவதற்காக யாழ்ப்பாணக் கச்சேரிக்குச் சென்றபோது, அங்குள்ள விறாந்தையில் பிரக்ஞையற்று வீழ்ந்தார். வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதும் அவர் உயிர் நீத்தார். மார்படைப்பே அவரின் மரணத்துக்குக் காரணமெனத் தெரிகின்றது.

## வடபகுதிப் புகையிரதம்

### நில்லாத இடங்களில் நிற்கும்

இவ்வாண்டு பெப்பிரவரி மாதம் முதலாந் திகதியிலிருந்து கொழும்புக்கும் காங்கேசன் துறைக்குமிடையே ஓடும் இராக்கால வண்டிகள் பளைக்கும் காங்கேசன் துறைக்குமிடையே உள்ள தங்கு நிலையங்களில் நின்று செல்லுமெனப் புகையிரதப் பகுதிப் பிரதம அதிகாரி தெரிவிக்கின்றார்.

## நயினாதீவு சுவாமி சமாதியடைந்தார்

நயினாதீவு சுவாமி என வழங்கப்படும் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமி அவர்கள் சென்ற புதன்கிழமை இரவு 12 மணிக்கு வண்ணார்பண்ணையிலுள்ள சிவலிங்கப்புளியடியிற் சமாதி யடைந்தார்.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

**Subramaniam Selvadurai** —Petitioner

*Testamentary Jurisdiction* } **No. 962**

*Vs.*

1. **Ambikaidevi**
2. **Visuvanathan**
3. **Vasanthadevi** all children of S. Selvadurai
4. **Valliammai** widow of Nagamuttu Nagalingam

—*Respondents*

In the matter of the Estate of the late **Nagaratnammah** deceased, of Araly West, Vaddukoddai.

This matter coming on for disposal before R. R. Selvadurai Esq. District Judge, Jaffna on the 11th day of November, 1948, in the presence of Mr. S. V. Somasundram, Proctor on the part of of the petitioner, and the affidavit of the abovementioned petitioner dated 3rd November 1948 having been read:

It is further declared that the said Valliammai widow of N. Nagalingam 4th respondent, be appointed guardian-at-litem over the 1st, 2nd & 3rd respondents and that the said Subramaniam Selvadurai, Petitioner be declared entitled to have letters of administration issued to him accordingly unless the respondents or others shall on or before the 15th day of December, 1948 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 24th day of November 1948

(Sgd.) **R. R. Selvadurai**
*District Judge*

[3591-ii]

This O. N. is extended to 16-2-49.

(Sgd.) **R. R. Selvadurai**
D. J.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 4951**

அளவெட்டி தற்போது மடுல்சிமா.
**கார்த்திகேசு செல்லத்துரை**
வழக்காளி

அளவெட்டி வடக்கு,
**காசிப்பிள்ளை கணபதிப்பிள்ளை**
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 4951-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1949-ம் ஆண்டு பெப்ருவரி (மாசி) மாதம் 19-ந் திகதி (19-2-49) சனிக்கிழமை பிற்பகல் 3½ மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

**தீர்வைத்தொகை:**—முதல் வட்டி ரூபாய் 1552-50-ம், இதில் ரூபாய் 1500க்கு 7-8-48 திகதி தொடக்கம் 10-12-48 திகதி வரைக்கும் 100க்கு 6 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் மூழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 155-67 சதம்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகக் கோவிற்பற்று அளவெட்டியிறை "தஞ்சிட்டி" நிலப்பரப்பு ஒன்பது (9-ம்) குளி 11-ம் பனைகளும் எல்லை: கிழக்கு சரவணை பொன்னையா பெண் நாகம்மாவுக்கும் காலம் சென்ற விசுவர் ஆறுமுகத்தின் உருமைக்காரருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு, கந்தசாமிபெண் ஆச்சிப்பிள்ளைக்குரிய ஆதனம். மேற்கும், தெற்கும் சரவணை பொன்னையா பெண் நாகம்மாவுக்குரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளிற் சொரியலாய் நிலப்பரப்பு இரண்டும் (2-ம்) குளி 3-ம் இன்னும் மேற்கெல்லைக் காணியின் தெற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் உரித்தும். ஆனல், இக்காணியின் வடக்கெல்லையருகாக மேற்கெல்லைக்காணிக்கு போகும் பாதையுரித்து புறநீங்கல்.

2. மேற்படி அளவெட்டியிறை "தஞ்சிட்டி" நிலப்பரப்பு பதினொன்று (11-ம்) குளி 13½ம் செய்பயிர் வான்பயிர்களும் வடக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும். எல்லை: கிழக்கும், வடக்கும் சரவணை பொன்னையா பெண் நாகம்மாவின் ஆதனம், மேற்கு சேனாதிராசா இராசகோபால் கைம் பெண் நன்னிப்பிள்ளைக்கும் பங்காளருக்குரிய ஆதனம், தெற்கு, சரவணமுத்து பெண் இளையாச்சிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், இதில் சொரியலாய் அரைவாசி (½)

3. மேற்படி வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்புக் கோவிற்பற்று சிறுவிளானிறை "கமட்டானை" நிலப்பரப்பு அறுபது (60-ம்) பனைகளும் வேம்புகளும். எல்லை: கிழக்கு ரோட்டும் அளவெட்டி ஊரெல்லையும், வடக்கு ரோட்டு, மேற்கு வீரகத்தி நாகமணிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு, வயிரமுத்து இரகுநாதக்கத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், இதில் சொரியலாய் அரைவாசி. (½)

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner &
Licensed Auctioneer

தெல்லிப்பழை
20-1-1949. [3598]

## பெற்ரேல் கட்டுப்பாடு

### ஏற்படமாட்டாது

மூன்றுமாத காலத்துக்குப் போதிய பெற்ரேல் இருப்பதால் பெற்ரேல் கட்டுப்பாடு இப்போதைக்கு நடைமுறைக்கு வரமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மருமக்களே!**

வணக்கம். இந்த வருஷத்தில் (1949) ஏதாவது ஒரு மாதத்தில் ஒரு திகதியைச் சொன்னவுடன், அந்தத் திகதியில் என்ன கிழமை என்று உங்களாற் சொல்லமுடியுமா? முடியாதுவிட்டால் **திகதியும் கிழமையும்** என்ற தலைப்பின் கீழ் பி.சுப்பராயலு அவர்கள் 'டமாரம்' என்ற சிறுவர் பத்திரிகையில் எழுதுகிறார். அதைக் கீழே தருகிறேன் வாசியுங்கள்.

கீழே ஒவ்வொரு மாதத்துக்கும் ஒவ்வொரு எண் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதை நன்ருக ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| ஜனவரி | ... | 6 |
| பெப்ரவரி | ... | 2 |
| மார்ச் | ... | 2 |
| ஏப்ரில் | ... | 5 |
| மே | ... | 7 |
| ஜூன் | ... | 3 |
| ஜூலை | ... | 5 |
| ஓகஸ்டு | ... | 1 |
| செப்டம்பர் | ... | 4 |
| ஒக்டோபர் | ... | 6 |
| நவம்பர் | ... | 2 |
| டிசம்பர் | ... | 4 |

உதாரணமாக ஏப்ரில் 9-ம் தேதி என்ன கிழமை என்று உங்களை ஒருவர் கேட்டால். நீங்கள் உடனே என்ன செய்ய வேண்டும் தெரியுமா?

அவர் சொன்ன திகதியுடன், ஏப்ரில் மாதத்துக்குக் கொடுக்கப்பட்ட 5 என்ற எண்ணைக் கூட்ட வேண்டும். கூட்டி வந்த எண்ணை ஏழால் பிரிக்க வேண்டும். மீதம் வருவது என்ன. 0 தான்! 0 வந்தால் சனிக்கிழமை என்று வைத்துக்கொள்ளுங்கள்.

இதேபோல ஓகஸ்ட் 22-ம் தேதி என்ன கிழமை என்ருல், 2 உடன், ஓகஸ்ட்டுக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ள 1 என்ற எண்ணைக் கூட்ட வேண்டும். மொத்தம் வருவது 23. அதை ஏழால் பிரிக்க வேண்டும். மீதம் வருவது 2. 2 என்ருல் திங்கட் கிழமை.

இப்படியே மொத்தத்தொகையை 7 ஆல் பிரிக்க வேண்டும். மீதம் 0 வந்தால் சனிக் கிழமை. 1 வந்தால் ஞாயிறு. 2 வந்தால் திங்கள். 3 வந்தால் செவ்வாய். 4 வந்தால் புதன். 5 வந்தால் வியாழன். 6 வந்தால் வெள்ளி. 7 வராது!

இதை நீங்கள் தெரிந்து கொண்டால் எந்தத் திகதியைச் சொன்னுலும் கிழமையைக் கண்டு பிடித்துவிடலாம். 'கலண்டரை' எடுத்துக் கிழமை சரிதாஞ என்று பார்த்தாற் சரியாகவே யிருக்கும்!

வணக்கம்.

கேசரிமாமா

## "விதியே! நண்பனும் இல்லையா"

வ. இ. செல்லத்துரை மே.33.

1. கூடியு இத்தாரில்லே,
கூட்டுமி னத்தாரில்லை
நாடிப்பழகுதற்கு—விதியே
நண்பருமில் லையாமோ?

2. வாடிவதங்கி நின்றேன்
வாட்டியே நின்றதுயர்
நாடித்து டைப்பதற்கு—விதியே
நண்பரு மில்லையாமோ?

3. நாட்டுப்புறப் பள்ளியிலே,
நல்லதொரு நண்பன் தன்னை
கூட்டிவைத்த பின்புஎந்தன்—விதியே
குட்டி மறைக்கலாமோ?

4. கிட்டக்கிட்டக் காட்டிநின்ருய்,
எட்டியெட்டி யெடுக்கவர,
தட்டிப்பறித்துக் கொண்டு—விதியே
தாண்டியே ஓடலாமா?

5. நாட்டுப்புறத் தோழனென்று,
நம்பிக்கை பற்றவர,
தட்டிக் கழிக்கலாமோ—விதியே
தகுதியு மாகுமோதான்?

6. என்நண்பன் தானேயென்று
தின்பண்டந் தந்தேன் தின்ன
வேண்டாமெனக் கென்றுநண்பன்—விதியே
வருத்துவானேனே என்னை?

7. அன்புட னீந்தபண்டம்,
ஆருக்கு மாகுமென்ருல்,
நண்பன்நான் தந்தபண்டம்—விதியே
நண்பன் வெறுப்பதேனே?

8. நம்பி நடந்தேன்நானும்
நல்லதோர் நண்பனென்று
வெம்பிவருந்த அவன்—விதியே
விட்டுமே ஓடுவதேன்?

9. கள்ளமொடு கபடுகளும்
உள்ளத்தே யில்லானென்று
தெள்ளித் தெளிந்துநானும்—விதியே
தேடியே சேர்வதெப்போ?

## தெரிந்ததா?

1. வச்சிரம் என்னும் பசை எப்படிச் செய்யப்படுகின்றது?
2. மத்திய இரேகையில் பூமியின் சுற்றளவு என்ன?
3. ஒரு கலன் தண்ணீரின் நிறை என்ன?
4. வானம் ஏன் விழுவதில்லை?
5. இலங்கையில் முற்காலத்துத் தலைநகரா யிருந்த இடங்களெவை?

**பதில்**

1. மாட்டின் குளம்பு தோல்களைப் பாணியா குழம்படிக் காய்ச்சி.
2. 23,901 மைல்.
3. 10 இருத்தல்.
4. விழுவதற்கு ஒன்றும் இல்லாமையால்.
5. அனுராதபுரம், பொல்லனறுவை, சிகிரியா, யப்பாகு, கம்பளை.

தொடர் கதை

# நடராஜன் வெற்றி

**ஆ. கணபதிப்பிள்ளை மே 12**

[சென்றவாரத் தொடர்ச்சி]

கூட்டம் முடிந்து நடராசனும் வீட்டிற்கு வந்தான். அவன் மனம் பலவிதமாக எண்ணியது 'எனது தந்தை'யை நாளை குடிக்கவிடமாட்டேன், என்று சங்கத்தில் மனம் ஒருப்பட்டு விட்டேனே? சொன்ன சொல்லை நிறைவேற்ருவிட்டால் நான் ஓர் சிறுவனு? தமிழ்ச் சமூகத்திற்கே வடுவுள்ளவனுவேன்? என்று பலவாருக அவன் மனது யோசித்தது. சரி ஓர் யுத்திவருகின்றது. இதன்படி நடந்தால்தான் நான் எனது தந்தையின் குடியை நிறுத்தலாம். என்று முற்றப் புள்ளிக்கு வந்துவிட்டான்.

"தம்பி சாப்பிட்டுவிட்டுப் படி" என்ற தாயின் வேண்டுகோட்கிணங்கச் சாப்பிடச் சென்ருன்.

"அம்மா.................!"

ஏதோ சொல்ல வாயெடுத்தவன் திடீர் என நிறுத்திவிடவே ஆச்சரியம் அடைந்த தாய் "என்ன" என்ருள்.

"அம்மா. கொஞ்சம் தண்ணீர் தா? விக்குகின்றது" என்ருன் நடராசன். தண்ணீரைத் தாய் கொடுத்தாள். ஆனுல் நடராசனே தண்ணீரைக் கவனிக்கவில்லை. உண்மையில் விக்கினல் [illegible] குடிப்பான. இப்படியான மனவேதனைக்கிடையே சாப்பாட்டை முடித்துப் படுக்கைக்குச் சென்ருன். ஆனுல் நித்திரை வரவில்லை. மெல்ல எழுந்தான். "எங்கே போருய்"? என்ற தாயின் சத்தம் கேட்டு மறுபடி வந்து படுத்தான். இரண்டாம் முறை எழுந்தான் "ச்! ச்!!" என்ற பல்லி சொற் கேட்டுத் திரும்பினுன்.

மூன்ரும் முறையும் பல்லியும் போக வேண்டாமென்று தடுத்தது. பல்லியின் சொல்லைக் கேளாமல் விறு விறு என்று நடந்தான். எங்கே கள்ளுமரத்தடிக்குத்தான்.

நாலு பக்கமும் பார்த்துவிட்டு மரத்தில் ஏறினுன். கால் நடுக்கமெடுத்தது. ஒருவிதமாக ஏறிக் கள்ளுமுட்டியைக் களற்றிவிட்டான். இனி இறங்க வேண்டியதுதான். ஆனுல் கால் மறுத்தது. நெஞ்சு எரிந்தது. தொண்டை வறண்டுவிட்டது. வருவது வரட்டும் என்று இறங்கினுன். தாடர் என்ற சத்தம் கேட்டுத் தாயும் தந்தையும் அக்கம் பக்கத்தாரும் மரத்தடிக்கு வந்தார்கள். கால்முறிந்து விட்டது. ஒட்டகப்பிலத்திற்குக் கொண்டுபோனுர்கள். பரியாரி, நடராஜன் தந்தையைப் பார்த்து இன்று நீர் ஒரு இடமும் போகப்படாது. பையனுக்குத் தேகம் முழுதும் நோவெண்ணெய் போடவேண்டும். சாயந்தரம் புக்கை கட்ட வேண்டும்" என்று சொன்னுர். பரியாரியின் வார்த்தையைக் கேட்டதும் நடராசனுக்கு அரைவாசி வருத்தம் மாறிவிட்டது. தந்தையும் வேறு பாதையின்றி மகனுடன் இருந்தார்.

† † †

**ஊரில்:**

பல மாதிரிப் பலரும் கதைக்கின்றனர். ஆனுல் உண்மையை அறிவார்களா? வேலுப்பிள்ளை மட்டும் தன் நண்பர்கட்குச் சொன்னுன். எனது பிரேரணைதான் நடராசனை இக் கஷ்டத்திற்குள்ளாக்கியது. மரத்தில் ஏறி முட்டியைக் கழற்றினுல் தந்தை கள்ளுக் குடிக்கமாட்டார் என்று பேதை நடராசன் நினைத்தான். ஆனுல் வேறுவிதமாக முடிந்துவிட்டது. கடவுள் நடராசனை விட்டாரா? இல்லை. அவரும், அவனுடன் இருந்து நடராசன் தந்தையைக் குடிக்காமல் தடுத்துவிட்டார். உண்மையில் நடராசன் தியாகம் மெச்சத்தக்கது. அவன் சங்கத்தில் வைத்த அன்பினுல் தான் இப்படி நடந்தான். ஆகையினுல் சங்கமே அவனின் ஆஸ்பத்திரிச் செலவைப் பொறுத்தல் வேண்டும். நண்பர்கள் ஒருப்பட்டனர். சங்கமும் சம்மதித்தது. ஆனுல் நடராசன் ஏற்ருல் தானே? இன்று அவன் தியாகத்தினுல்தான் நாட்டுமக்கள் மதுவருந்தாமல் இருக்கின்ருர்கள். நடராசன் தியாகத்திற்கு அளவு உண்டா?

## விடா முயற்சி

**சு. காந்திமதி மே.145**

"சின்னச் சின்னச் சிற்றெறும்பே
சிங்காரச் சிற்றெறும்பே
உன்னைப்போல நானுமே
உழைத்திடவே வேணுமே"

என்று கூறும் புலவரைப் போற்றவேண்டும். ஊக்கங் கொண்ட ஒருவன் ஆக்கமுறுதலுண்மை. "ஊக்கமது கைவிடேல்" என்ற அன்னையின் மொழியைக் கண்ணெனவோர்ந்து இகழ்ச்சியுருது முயற்சியுறுதல் உண்மையுடையாரின் அரிய செயலன்ரே. ஆதலின் பாலர் நாங்கள் "முயற்சி திருவினையாக்கும்" என்ற வாக்கின்படி முயற்சி செய்து நன்மையை அடைவோமாக.

ஒன்றைச் செய்யத் தொடங்கி இது என்னுற் செய்ய முடியாது என்று கைவிடாதீர்கள். திரும்பவும் திரும்பவும் அதையேசெய்வீர்களானுற்கட்டாயம் நன்மைபெறுவீர்கள்.

ருெபேட் புரூஸின் கதை உங்களுக்குத் தெரிந்ததுதானே. ருெபேட் புரூஸ் ஆறு முறை சண்டைசெய்து தோற்று ஒரு குகையிலிருக்கும் பொழுது ஒரு சிலந்தி தன் வலையைப் பின்னி முடிப்பதற்காக ஆறு முறை பாய்ந்தும் தவறிவிட்டது.ஏழாவதுமுறை பாய்ந்து சரியான இடத்தைப் பிடித்துவிட்டது. இதைக் கண்ட ருெபேட் புரூஸ் பின்பும் சேனை திரட்டிப் போர்புரிந்து வெற்றியடைந்தார்.

ஆதலால் நாம் எல்லோரும் முயற்சி செய்து நன்மைபெற வேண்டும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்."

முயற்சியில்லாதவர்கள் எல்லோரும் இகழ்ச்சிதான் அடைவார்கள். அவ்விகழ்ச்சியை நாம் பெருவண்ணம் முயற்சிசெய்வோமாக.

**பிறந்ததின வாழ்த்துக்கள்**

[30-1-49 — 5-2-49]
மே.220: சி. திருச்சிற்றம்பலம்.

■

மேற்குறித்த எனது மருமகன் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக!

## மருமக்கள்

மே 251. கந்தையா கந்தசாமி, $\frac{24}{4}$ மதவடி ஒழுங்கை, வண்ணுர்பண்ணை. மே.252. ஐயாமுத்து பாலசுப்பிரமணியம், மீன்கடை ருேட்டு, பருத்தித்துறை. மே.250. நா. கருணவதி, யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.

**ஈழகேசரி — பாலர் பகுதி**

முழுப்பெயர்:.......................................

விலாசம்:.......................................

.......................................

.......................................

பிறந்ததிகதி:.......................................

.......................................

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீனர்கள் தயாநிதி

செல்வி வி. தங்கம்

இறைவனை எண்ணும்போது நாம் எப்படி அன்பு, அருள், சத்திய மென்பவற்றின் உருவமாக அவரை நினைக்கின்றோமோ, அப்படியே காந்திஜியை நினைக்கும்போதும் அவருடைய சிறந்த பல குணங்களை நம் உள்ளத்தில் உதிக்கின்றன. மகாத்மாவிடம் திவ்வியமான குணங்கள் எல்லாம் இருந்தனவென்று சொல்லுதல் ஒன்றுமே போதாது. நல்ல குணங்கள் என்று சொல்லப்பட்டவையெல்லாம்மகாத்மாவினூடாகத் திவ்வியமான தன்மையைப் பெற்றனவென்று கூறினும் மிகையாகாது. மகாத்மாவைப் போல் எல்லாத் தனமைகளிலும் மேம்பாடு பெற்ற ஒருவரை இதுவரை உலக சரித்திரத்திலேயே கண்டிருக்க முடியாது. அவர் நீதியிற் சிறந்த நிர்மல யோகி; வாதனை சிறந்த அரசியல்வாதி; ஞானிகட்கெல்லாம் ஞான சற்குரு; தீனர்களின் திவ்விய பந்து; அன்பே உருவான அருள் வள்ளல்; தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்; தாயினும் சிறந்த தண்ணளியூட்டும் தயாநிதி; ஆபாசமும் பாபச்செயல்களும நிறைந்த இவ்வுலகில் ஆத்ம சாந்தியுடன் வாழ்ந்த ஆத்ம ஞானி; சாந்தியே உருவெடுத்த சாந்தரூபி; சாத்வீகப்போரினாற் சாம்ராச்சியங்களையே வென்று வெற்றிக்கொடி நாட்டிய வீரர்; தேசங்கள் தெய்வமெனக் கொண்டாடும் தெய்வீகஞானி; சத்திய சோதனைகளினால் தூய்மையாக்கப்பட்ட சத்தியத்தின் நித்தியஸொரூபி; சான்றாண்மை மிக்க சமரச சன்மார்க்கபோதனையாளர்;நத்தம்போற்கேடும் உளதாகும் சாக்காடும் எய்திய வித்தகர். இத்துணைப் பெருமைக்கும் அவர் பாத்திரமாயது ஏன்? எந்தக் கருணையால் ஏசுநாதர் உலகமக்களின் உள்ளங்களைக் கவர்ந்தாரோ, எத்திறப்பட்ட ஞானத்தினால் புத்த பகவான் உலகுக்கு ஞானோபதேசஞ் செய்தாரோ, எவ்வகைப்பட்ட தீர்க்கதரிசனத்தால் முகமதுநபி உலகிற்கு ஒளியூட்டினாரோ, எவ்விதமான ஆத்மோபதேசங்களால் பகவான் கண்ணனும், பரமஹம்சரும் ஆத்மீக வாழ்வை உலகில காட்டினரோ, அதே கருணையும், ஞானமும், தீர்க்கதரிசனமும், ஆத்மீக வாழ்வும் ஒருங்கே திரண்டு அவதரித்தாரல்லவா நமது கருணைவள்ளலான காந்திஜி. இந்த மகத்துவமெல்லாம் அவருக்கு எப்படிக் கிடைத்தது என்பதை நாம் நன்கு ஆராயவேண்டும்.

ஒழுக்கம் தலைசிறந்த வாழ்வொன்றுமே அதற்குக் காரணம். காந்தி மிருக இச்சையை அடக்கினார்; மிருக சுபாவங்களை அகற்றினார்; புனித வாழ்வை மேற்கொண்டார்; புண்ணிய கைங்கரியங்களைச் செய்தார். தூய குணங்களை விருத்தியாக்கினார்; மனிதனாயிருந்து மகாத்மாவானார். புவி ராசர்களுக்கு மெட்டாத புகழும், கவி ராசர்களுக்கு மப்பாற்பட்ட கற்பனையும், தவ ராஜ யோகியர்க்கு மெட்டாத தத்துவமும், யுவ ராஜ இளைஞர்க்குமில்லாத தீரமும் ஒருங்கே கைவந்த விசித்திரமான பொருளானார்; அவருடைய வாழ்வு விஞ்ஞான ஆராய்ச்சியையும், மெய்ஞ்ஞான நுணுக்கத்துக்கும் அப்பாற்பட்டது. மனைவியுடன் கூடவிருந்தும் மாசு மறுவற்ற தூய பிரமச்சாரியாய் வாழ்ந்த அந்த மாமுனிவருடைய வாழ்வு அன்பு, அஹிம்சை, சத்தியம் என்பவற்றையே மூலாதாரமாகக் கொண்டது.

## மேலான தர்மம்

அன்பு! எவ்வளவு திவ்யமான குணம். அன்பினால் எதைத்தான் சாதிக்க முடியாது. அன்புடையவனுக்கு இவ்வுலகம் முழுதுமே சொந்தம்; அவனுக்குத் தனக்கென ஒன்றுமே கிடையாது. அன்பு சுயநலமற்றது. ததீசி முனிவன் அன்புமேலீட்டால், கேட்பதை மறுக்காது கொடுக்க வேண்டும் என்னும் கருத்தால் தன் முதுகெலும்பையே இந்திரனுக்குக் கொடுத்தான் என்பது பொய்யாமொழியல்லவா? அன்புடையவன எதையும் மறுக்க மாட்டான். உலக க்ஷேமத்தையே கருத்தாகக் கொண்டவனிடமே தூய அன்பு வளரும். ஒரு தனியுயிர் உலகிற் கஷ்டப்படுவதையும் அவன் சகிக்கமாட்டான். உலகிலுள்ள் ஒருவனாவது இரந்து சீவிக்க இச்சமூகம் இடங்கொடுக்குமாயின், உலகத்தைப் படைத்த கடவுளே அழியட்டும் என்கிறார் வள்ளுவர்; "தனியொருவனுக் குணவில்லை யெனின்—இச்சகத்தினை யழித்திடுவோம்" என்று கர்ச்சிக்கின்றார் அமரகவி பாரதியார். எம்முடைய அன்பு எமக்கும் எம்மைச் சேர்ந்தவர்க்கும் மட்டுமன்றி எல்லாரிடமும் பரந்து செல்ல வேண்டும். வருங்காலச் சமூக சிறப்புக்கு அதுவே மூலவேர். அன்பினால் தருமத்தைமட்டுமன்றி அதர்மத்தையுமே வெல்லலாம்.

அஹிம்சை! எல்லா மதங்களும் ஒப்புக்கொள்ளும் ஒரு குணம் இதுதான். அஹிம்சையே மேலான தர்மம் என்பது வேதவாக்கியம். அஹிம்சையைப் புத்தரும் அவருக்குப்பின்பு காந்திஜியும் போதித்தனர். அஹிம்சை என்பதற்கு இன்னா செய்யாமை—அஃதாவது எவ்வுயிர்க்கும் துன்பஞ் செய்யாமை என்பது பொருள். தனக்குத் தீங்கு செய்பவனுக்கும் துன்பம் செய்யக்கூடாது; மனத்தாற்கூட அதனை நினைக்கக்கூடாது. அவர்களுக்கும் நன்மையே செய்யவேண்டும். அன்பு என்னும் திவ்வியமான குணம் நிறைந்த ஒருவன் ஒருபோதும் மற்றவர்களுக்குத் தீமை செய்யமாட்டான். தீமைசெய்வதனால் ஒருபோதும் நன்மை கிடைக்கமாட்டாது. இன்னா செய்வதெனினும், இனியவற்றைச் செய்வதனால் நல்ல பலன் கிடைக்கும்: இனிமையான காரியங்களைச் செய்வதற்குப் பதிலாக, இனிமையற்ற காரியங்களைச் செய்தல், பழமிருக்கக்கூடியதாகக் காய்களைப் பிடுங்குவதனை ஒக்குமென்கிறார் திருவள்ளுவர். இஃது எவ்வளவு பேதைமை என்பதை நாம் நன்குணரலாம். அதனைச் செய்கையிற் கொண்டுவர முற்படவேண்டும். எமக்கு யாராவது தீமை செய்தால் அதற்குப் பதிலாக அவர்களுக்குத் தீமைசெய்யாமல் நன்மை செய்துவிடல் வேண்டும். அதுவே அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சிறந்த தண்டனை. இவற்றையெல்லாம் மகாத்மா காந்தி தன் வாழ்க்கையிற் செய்து காட்டியுள்ளார். நாமனைவரும் நன்கறிந்த விஷயம் அது.

## உண்மை ஞானி

மகாத்மா என்றும் போதித்த இன்னொரு திவ்வியவஸ்து சத்தியம். சத்தியம் எனினும், வாய்மையெனினும், உண்மையெனினும் ஒன்றே. எங்கும், எந்தக்காரியத்திலும், எப்பொழுதும் சத்தியத்தைக் காணுபவனே உண்மை ஞானி. சாதாரண ஊனக் கண்களாலும் உலக இன்பங்களிற் சிக்கித் தவிக்கும் உள்ளமுடையவர்களாலும் உண்மையைக் காணமுடியாது. உலக கர்த்தாவான இறைவனே சத்தியரூபமானவர். சத்தியத்துக்குப் [illegible] பதையிட்டே நாம் ஆராய்ச்சி செய்துகொண்டு செல்லலாம். பொய்யான ஒரு காரியம் நன்மையைத் தருமாயின் அதனைச் செய்யலாம் என்கிறார் திருவள்ளுவர். இதிலிருந்து எது நன்மை பயக்கக்கூடிய காரியமோ அதைச்செய்தலே உண்மை; தீமை பயக்கக்கூடியனவெல்லாம் பொய். இதைச் சாட்டாக வைத்துக்கொண்டு என்றும் பொய் சொல்லவும் முற்படக்கூடாது. "வாய்மையெனப்படுவது யாதெனின் யாதொன்றும்—தீமை யிலாத சொலல்"—என்பது வள்ளுவர் வாக்கு. எது தீமை, எது நன்மை என்பதை, நற்குண நற்செய்கையுடைய ஞானி ஒருவனாலேயே கண்டுகொள்ள முடியும். இந்த உண்மை மகாத்மாவின் வாழ்வின் மூலமாக நன்கு பிரதிபலித்தது. சத்தியாக்கிரகம் மூலமாகவே தனது போராட்டங்களையெல்லாம் அவர் நடத்தினார். சத்தியாக்கிரகம் என்பது—உண்மையை நிலைநாட்டுதல் எனப் பொருள்படும். அந்தக் கருவியைப் பின்பற்றியமையாலேயே நமது தாய்நாட்டுக்கு உண்மைச் சுதந்திரம் கிடைத்தது. அந்த வழியினாலேயே மகாத்மாவின் திவ்விய குணங்களைப் பின்பற்றுவதனாலேயே எதிர்காலச் சமூக அமைப்பு நன்னிலைபெறும்.

குறிப்பு:

வதிரி சைவபரிபாலனசங்கம் நடாத்திய பேச்சுப்போட்டியில் இப்பேச்சு தங்கப் பரிசில் பெற்றது. —ப-ர்.

## சித்தவைத்திய சங்கம்

இலங்கைச் சித்தவைத்திய சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் வைத்தியர் கே. எஸ். பரிபூரணானந்தா தலைமையில் யாழ்ப்பாணம் சன்மார்க்க போதனா ஆங்கில வித்தியாசாலையிற் கூடியது. அச்சமயம் ஏகமனதாகப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன. தீர்மானங்களுள் அத்தருணம் தலைவர் கூறியதாவது:

அரசாங்கம் படக்காட்சி மூலம் கசம், மலேறியா முதலிய கொடிய நோய்களைப் பற்றியும் கிராமாந்தரங்களிலுள்ள பொது சனங்கட்குப் பிரசாரம் செய்ய வேண்டிய ஏற்பாட்டை மோட்டார்வண்டி மூலம் செய்துவரின் பல நோய்களைச் செலவில்லாமலே தடைசெய்யலாமென்றும், மருந்துகளுக்குச் செலவிடும் பணத்தில் ஒரு பகுதியை இதற்குச் செலவிடின் வருங்காலத்தில் மருந்துகளின் தேவையும் அதன் செலவும் மிகுதியும் குறையுமென்றும் இவைகளைக் கனம் மந்திரியவர்கள் கவனிப்பாரா?

## எந்தையின் தியாக வாழ்வு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

னதே. போர்வீரருக்குரிய சகல கௌரவங்களுடனும் அவர் தகனஞ் செய்யப்படும் இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டமை கூட மிகவும் ஏற்றதொன்றே. யுத்தத்துக்குப் படைகொண்டு சென்ற போர்வீரர்கள் அனைவரிலும் மேலானவர், இச்சிறிய மனிதர்; அவரே அனைவரிலும் வலி சிறந்தவர், வெற்றிவாகை புனைந்தவர்.

இப்போது டில்லிமாநகரம் சரித்திர பூர்வமாக ஏழு இராச்சியங்களுக்கு முரியதாயிருந்த நகரமன்று; யார் தன்னுடைய அடிமை நாட்டினை அந்நிய ராதிக்கத்தினின்றும் விடுதலையாக்கி அதற்குச் சுதந்திரமும் சுதந்திரக் கொடியும் வழங்கினாரோ, அந்தப் பெருமை வாய்ந்த புரட்சியாளரின் திருக் கோவிலாக முக்யத்துவம் பெற்று விளங்குகிறது. அந்நகரம் எங்கள் தலைவரும் வழிகாட்டியும் தந்தையுமாகிய அவர் சமாதானமாய் ஆறுதலடையாதொழிக; அவரது திருமேனிச்சாம்பரும் எரிக்கப்பட்ட அச் சந்தனக்கட்டைகளின் சாம்பரும் வலிமை சிறந்து, புத்துயிர் பெறுக; அவருடைய அஸ்தித் துகளெல்லாம் ஊக்கமும் உயிர்நிலையும் பெற்று ஒளிரட்டும்; அதனால் இந்தியநாடு முழுமையும் அவரது இறப்பின் பின்பு சுதந்திரத்தின் உண்மைத் தன்மைக்கேற்றவாறு திரும்பவும் சிறந்த சக்திபெற்று மறுமலர்ச்சி யடையட்டும்.

எந்தையே ஆறுதலொழிக; எங்களையும் அவ்விதம் ஆறியிருக்க விடவேண்டாம். எங்களது பிரதிக்ஞைக்கு எங்களைத் தகைமைப்படுத்துங்கள். உங்கள் பின்னுரிமையாளரும், வழித்தோன்றல்களும், பணியாளரும், உங்கள் கனவுகளை நனவாக்குதற்குரிய பாதுகாப்பாளரும், இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிப்போருமாயிருக்கும் எங்களுக்கு எங்கள் வாக்குறுதியை நிறைவேற்றும் வல்லமையைத் தந்தருளுங்கள். தங்க ளன்புக்குச் சிறந்த பாத்திராயவர்களுக்காகத் தாங்கள் செய்த சீரிய உயிர்த்தியாகத்தினால் அநித்தியத்துக்கு அப்பாற்பட்ட நிலைமையிலிருந்தே அநித்தியத்தைக் கடந்து விட்டீர்கள். வாழ்நாள் முழுவதினும் மிக வல்லமையுடையராய் இருந்தது தங்கள் வாழ்வு; மரணத்திலும் அதே வல்லமையைத் தந்தருள்வீர்களாக!


## இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி
## THE CEYLON STATE MORTGAGE BANK

இந்த அரசாங்க ஈட்டு வங்கியிற் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையிற் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கி யிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்குந் தொகை 5,000 ரூபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும; 5,000 ரூபாவுக்குக் கூடியும் 10,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும; 10,000 ரூபாவுக்குக் கூடியும் 50,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும; 50,000 ரூபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல, 127, கேமேல் பிளேஸ்', கோழும்பு, [illegible] விலாசத்திற்கு எழுதி அறியவும்.

[3544]



## பூகோளத்தொடர்
## பூமிசாஸ்திரம்
### நான்காம், ஐந்தாம் புத்தகங்கள்

★

பலகாலம் ஆசிரியராயிருந்து அனுபவம்பெற்ற திரு. வே. மு. சுபாரத்தினசிங்கம், B. A., அவர்களால் 4-ம், 5-ம் வகுப்புகளுக்கென, பாடத்திட்டத்துக்கமையச் சிறந்த முறையில் எழுதி வெளியிடப்பட்டிருக்கின்றன.

4-ம் புத்தகம் — சதம் 80
5-ம் புத்தகம் — ரூ. 1-00
தபாற் செலவு வேறு

★

சுன்னாகம் : தனலக்குமி புத்தகசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ப் பலி

சொக்கன்

## 7

அடுத்தநாள் இந்த விஷயம் என் சகபாடிகளிடையே பரவிவிட்டது. கேட்கவேண்டுமா? வம்பளப்பதென்பது பெண்மாணவிகளுக்குப் பரீட்சைப் பாடங்களில் ஒன்றாக இன்னும் ஆகவில்லை. அப்படியானால் எங்கள் கலாசாலை மாணவிகள் ஒவ்வொருவரும் அந்தப் பாடத்தில் முதன்மையாகத் தேறுவார்கள்.

'எங்கள் வல்லவனுக்குக் கூடக் காதல்பித்துத் தலைக்கேறிவிட்டதடி' என்று விமலா அடி எடுத்துக் கொடுத்தாள். அதன் பின்னணியாக ஒவ்வொருத்தியும் என்னை எப்படியெல்லாம் கேலி செய்யமுடியுமோ அப்படி எல்லாம் செய்தார்கள்.

'பருவம் வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்று சரோஜா சொன்னாள். எல்லோரும் கலகலவென்று சிரித்தார்கள். எனக்கும் சிரிப்பாகத்தான் இருந்தது. ஆனால் கஷ்டப்பட்டு அடக்கிவிட்டேன்; கோபம் போன்று அபிநயித்தேன்.

கேலி செய்பவர்களுக்குக் கேலி செய்யப்படுபவர் கோபிக்கக் கோபிக்கத்தான் உற்சாகம் கூடுதலடையும். என் கோபம் அவர்கள்முன் பயனற்றுவிட்டது. எக்கச்சக்கமான நிலையில் மாட்டிக்கொண்டுவிட்டேன். தப்ப வழி தெரியவில்லை. இது மிகச் சங்கடமான ஓர் நிலைமை!

அவர்கள் தங்கள் கேலியைத் தொடர்ந்தார்கள்.

'காதலனை அடிபணியச் செய்வதாகச் சொன்ன புவனா, காதலுக்கு அடிமையானது ஆச்சரியந்தான்.' இவை நிர்மலா சொன்னவை.

'ஆனாலும் புவனா அதிர்ஷ்டசாலிதான்! அவள் விரித்த கண்ணியிற் சிக்கிய புறா மிகவும் பெறுமதியானது' என்றாள் பரமேஸ்வரி.

'புவனா புதுமைப் பெண்ணல்லவா? ஆண்மையும், புருஷத்துவமும் நிறைந்த நாகராஜனின் முன்பு இவள் கனவுகளெல்லாம் சிதைந்தல்லவா போய்விடும்' என்று சரோஜா கண்ணைச் சிமிட்டிக்கொண்டு கூறினாள்.

என்னாற் பொறுக்கக்கூடவில்லை. "நீங்கள் என்னவெல்லாமோ சொல்கிறீர்கள். உங்கள் பரிகாசம் வெறும் பரிகாசமளவிலேதான் இருக்கும். என் வாழ்க்கையில் நான் விவாகமென்று ஒன்று செய்துகொண்டால் அம் மணவாளன் நாகராஜனைத் தவிர்ந்த வேறொருவனாய்த்தான் இருப்பான்."

"எட்டாப்பழம் புளிப்பது சகஜந்தான்" என்றாள் நிர்மலா.

நான் ஒன்றும் பேசாது மௌனமாய் என் அறையை நோக்கி ஓடினேன். அவர்கள் சிரிப்பொலி என்னைத் தொடர்ந்தது. நான் அறைக்கு வந்து வெகுநேரத்துக்குப் பின்பு கூட அவர்கள் சிரிப்பொலி அடங்கவில்லை.

பின்பு 'இந்த வார்த்தைகளை நான் ஏன் சொன்னேன்' என்று மனஸ்தாபப்பட்டேன். அடிக்கடி என் மனச்சாட்சியை நானே ஏமாற்றுவதையிட்டு வெட்கமடைந்தேன்!

'இந்தப் பிரதிக்ஞை சாத்தியமற்றது' என்று என் உள்ளம் சொல்லிற்று. ஆனால் சாத்தியமற்றது என்ற இதைக் கைவிட்டேனானால் நான் அடையும் அவமானம்? நினைக்கவே பயங்கரமாயிருக்கிறது?

வாழ்க்கையில் முதல் தடவையாக என்மீதே வெறுப்படைந்தேன். உலகத்துக்காக நான் எவ்வளவு அடங்கி ஒடுங்கி நடக்கிறேன்? சின்னஞ்சிறு விஷயங்களுக்குக் கூடப் பிரதிக்ஞை செய்து கொண்டு அவற்றை நிறைவேற்ற முடியாமல் எவ்வளவு அல்லற்படுகிறேன்?

நான் அழவில்லை. ஆனால் என் உள்ளம் தன்மேற் சுமத்தப்பட்டிருக்கும் பிரதிக்ஞை ஆகிய பார வஸ்துவைத் தாங்க முடியாது நெளிந்து கொடுத்தது; வேதனைப்பட்டது.

நான் எனக்கே விளங்காத ஓர் புதிர்!

## 8

என் சிநேகிதிகளுடைய பரிகாசம் வெறும் பேச்சோடு நின்றுவிடவில்லை. என்னையும் நாகராஜனையும் ஏதாவது ஒரு விஷயத்தில் தொடர்புபடுத்திவிட்டுவிட்டு வேடிக்கை பார்க்க அவர்கள் விரும்பினார்கள்.

இதற்கு எங்கள் மாணவர் கழகத்து வருடாந்தத் தேர்தல் தகுந்த சந்தர்ப்பம் ஒன்றை அளித்தது. அவ்வருடத்து பத்திரிகைக்கு ஆசிரியராக நாகராஜனும், உதவி ஆசிரியராக நானும் தெரியப்பட்டோம்.

எனக்கு இந்தப் பதவி தகுதியானதேயல்ல. எங்கள் வகுப்பிற் கட்டுரை எழுதுவதில் நான்தான் கடைசி ஸ்தானத்திலிருந்தேன். உலகியல் அறிவும் எனக்குப் போதாது. ஆனால் நாகராஜனின் கீழ் பதவி வகிக்க நேர்ந்த அந்தச் சந்தர்ப்பத்தை உதறித்தள்ள நான் விரும்பவில்லை!

ஆனாலும் என் இயற்கையான கர்வத்துடன் அப்பதவியை உதாஸீனம் செய்வதாகக் காட்டிக்கொண்டேன். என் உதாஸீனத்தால் இந்த அருமையான சந்தர்ப்பத்தை இழந்துவிடுவேனோ என்ற பயமும் இருக்கத்தான செய்தது! நல்ல காலமாக அப்படி ஒன்றும் நடைபெறவில்லை!

நாகராஜனுக்கு இந்தத் தேர்தல் ஒரேயடியாக உற்சாகத்தைக் கொடுத்துவிட்டது. இது அவருடைய சில செய்கைகளால் தெரியக்கூடியதாயிருந்தது.

எங்கள் பத்திரிகை கையெழுத்துப்பிரதி. ஒரே ஒரு பத்திரிகைதான். மாதாந்தம் அது எழுதப்பட்டு கலாசாலையிலுள்ள நூல் நிலையத்தில் வைக்கப்படுவது வழக்கம்.

நாகராஜன் பத்திரிகாசிரியராயிருப்பது இதுமுதல் தடவையல்ல. கடந்த வருஷமும் அவரே பத்திரிகாசிரியராயிருந்தார். அந்த வருடம் ஒரு முறையாவது அவர் தம் உதவியாளருக்குச் சிரமம் கொடுத்தது கிடையாது. எத்தனை பக்கங்களாயினும் அலட்சியமாக எழுதித்தள்ளி விடுவர். பிழை திருத்தம் செய்வதும் அவர்தான்.

ஆனால் இப்பொழுது அடிக்கடி அவருக்கு எழுதுவதில் அலுப்புண்டாயிற்று. மாணவர்களிடம் விஷயங்களைச் சேகரித்துப் பத்திரிகை வெளியாவதற்குச் சில நாட்களுக்கு முன்பாக என்னிடம் தந்துவிடுவார். ஆசிரியத் தலையங்கமும் கடைசிநாள் நானே எழுத நேரிடும்.

உண்மையாகவே சொல்கிறேன்! இது எனக்குப் பெரும் கஷ்டமாயிருந்தது! நான் எழுதும் வேகம் நத்தை வேகம்! எழுத்தும் அழகானதல்ல! எழுத்து, சொல், பிழைகளும் அதிகமாக இருக்கும்!

நாகராஜனும் என்னைக்கொண்டு எழுதுவிப்பதில் என்னதான் சந்தோஷத்தை அடைந்தாரோ? இந்த விஷயத்தில் அவர் மனப்பான்மையைக் கடைசிவரை என்னால் அறிய முடியவில்லை.

கடைசிநாட்கள் இரவுகளில் கண்விழித்திருந்துகூட எழுதவேண்டிய நிலைமை ஏற்படும். இதை என் சிநேகிதிகள் எப்படியோ அறிந்துவிட்டார்கள். கேட்கவேண்டுமா பரிகாசத்துக்கு! எதற்கும் ஒரு எல்லையுண்டல்லவா? இந்தத் தடவை எனக்கு அவர்கள் பரிகாசம் எல்லை மீறுவதாகத் தோற்றியது. சொந்தமானத்தையும், கௌரவத்தையும் காக்கவேண்டுமென்ற நிலைமைக்கு வந்துவிட்டேன்.

நாலாவது மாதம் நடந்த மாணவர் கழகத்தில் நான் என்னுடைய பதவியிலிருந்து விலகிக்கொண்டேன். எத்தகைய தடையாலும் என்மனம் தளர்ச்சியடையவில்லை; நான் முனைந்து நின்றேன்; நாகராஜனுடைய முகம் ஒரேயடியாகக் கறுத்ததை நான் அந்தச் சமயத்திற் கவனிக்காமலில்லை. எனக்குமட்டும் இது பூரணமான விருப்பமா? இது அவருக்குக் கிடைத்த இரண்டாவது தோல்வி! என்னுடைய மனமும் உள்ளார்ந்து வேதனைப்படுகிறது என்பதை அவர் அறிந்திருந்தாரானால் அவருடைய மனதைத் தேற்ற என்னால் முடியவில்லை. நான் அவரிலும் பார்க்க என் மானத்துக்கு மிகுந்த மதிப்புக் கொடுத்தேன்.

நான் ஓர் பைத்தியக்காரி! அல்லது காதலின் பெறுமதியை அறியாதவள் என்றுவது ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

## 9

எனது விஷப்பரீட்சை தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டே இருந்தது. இந்த விஷப்பரீட்சை என்னை அவரிலிருந்து வெகு தூரத்துக்குக் கொண்டுபோகிறது என்பதை நான் அன்று உணரவில்லை.

அன்று பாடசாலை மாணவ மாணவிகளெல்லோரும் சினிமாவுக்குப் போயிருந்தோம். அப்படத்துக்கான கதையும் காதற்கதைதான். நாங்கள் பின் வரிசையிலிருந்தோம். ஆண் மாணவர்கள் முன்வரிசையிலிருந்தார்கள்.

படம் ஆரம்பிப்பதற்கு முன்னுள்ள இடைநேரத்தில் அவர் என்னை அடிக்கடி திரும்பிப் பார்த்தவண்ணம் இருந்தார். அந்தக் கண்களின் தாக்கத்தி என் உடல் உணர்ச்சி எங்கும் ஊடுருவிச் சென்றது. என்றுமே நான் அதிக கவனம் செலுத்தாது விட்டிருந்த அவை அச்சமயத்தில் என் மதிப்புக்கும் மேற்பட்டதாக, 'நீ பணிந்துதான் ஆகவேண்டும்' என்று உறுதியிட்டுச் சொல்வதாக எனக்குத் தோற்றின.

பெண்களின் விழிகளை மாரன் அம்புகள் என்றும் குமுதமலர்கள் என்றும் வர்ணிக்கிறார்கள். ஆனால் இவர் போன்ற ஆண்மக்களின் விழிகளை எவ்விதம் வர்ணிப்பது? எங்கள் விழிகள் காதலுக்குரியவரின் உள்ளத்தை ஈர்க்கும் சக்தி மட்டும் உடையவை. ஆனால் நாகராஜன் போன்றவர்களின் விழிகளோ உள்ளம், உணர்ச்சி, உயிர்ப்பு யாவற்றையும் ஊடுருவிச் செல்லும் சக்திவாய்ந்தவை.

நாகராஜனின் விழிகளை உற்று நோக்கியபோது விவேகானந்தரின் அந்தக் கெம்பீரமான நீண்டவிழிகள் ஞாபகத்திற்கு வந்தன. சீ! இதென்ன ஒப்புவமை! காதலின் கடிவாளத்திற் கட்டப்பட்டுநிற்கும் இந்தக் குதிரையை அந்த வேதாந்த கேசரியுடன் ஒப்பிடுவதா? கூடாது.

அன்று கோபிகைகளுடன் லீலைபுரிந்த மாயக் கண்ணனுடன் ஒப்பிடலாமா? ஆம்! அதுவே பொருத்தம்! நாகராஜன் என்ற பெயர் இவருக்குச் சற்றுமே பொருத்தமில்லை. கண்ணே செவியான நாகராஜனிலும் கண் அழகனான கண்ணனென்பதே இவருக்குப் பொருத்தம்!

நான் என்னை மறந்துவிட்டேன். சூழ் நிலையையும் மறந்துவிட்டேன். எங்கோ ஒரு அழகான சோலையில் தென்றல் வீசும் பொழுது பறவைகளின் இனிய கானத்தோடு காதலனை வரவேற்கும் காதலியாக அச் சமையத்தில் மாறியிருந்தேன்? என்னுடைய கௌரவமும் தன் மதிப்பும் கூட அச்சமையத்தில் உள்ளத்தின் ஒரு மூலையில் ஒளிந்துக்கொண்டன.

நான் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். அவரும் இதைத்தானே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். விடுவாரா, இத்தகைய சந்தர்ப்பத்தை? அவரும் அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தார்.

## தொடர் கதை

"காதலர்கள் தங்கள் நான்கு கண்களைக் கொண்டுதான் உலகத்தை நோக்குகிறார்கள்; உலகமோ தனது பல்லாயிரம் கண்களுடன் அவர்களை நோக்குகிறது" என்பது பொய்வார்த்தையல்ல.

எங்கள் இருவரையும் எனது சிநேகிதிகள் கவனித்துவிட்டார்கள். சும்மாயிருப்பார்களா? என் காலில் ஒருத்தி, ஒன்றும் அறியாதவள் போன்று தற்செயலாக மிதிப்பவள் போன்று, மிதித்துவிட்டாள். அதுவரை கனவு லோகத்திற் சஞ்சரித்தவள் திடுக்குற்றுத் திரும்பினேன். தேவர்களுடைய கண்கள் அத்தனையும் என்னையே கவனித்துக்கொண்டிருந்ததை அப்போதுதான் உணர்ந்தேன்.

அவர்கள் நான் திரும்பியதும் கலகலவென்று சிரித்தார்கள்! அந்தச் சிரிப்பின் அர்த்தம் 'புவனா! நீ அன்று சொன்னாயே! நான் ஒருவேளை விவாகம் செய்துகொண்டால் அது நாகராஜனைத் தவிர்ந்த வேறொரு மணாளனாய்த்தான் இருப்பான் என்று, இப்பொழுது உன் பிரதிக்ஞை என்னவாய்ப் போய்விட்டது பார்த்தாயா?' என்பதுதான். இது நான் அறியாததல்ல.

அதன்பின்பு நான் நாகராஜன் இருந்த பக்கமே திரும்பவில்லை. (தொடரும்)

---

### நரக்களி—டாம்புரிக் கிராம முன்னேற்றச் சங்கம்

மேற்படி சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் சென்ற 22-1-49 சனிக்கிழமை பிற்பகல் நரக்களித் தமிழ்ப் பாடசாலை மண்டபத்திற் கற்பிட்டிப் பகுதித் திறை அதிகாரி ஸ்ரீ வி. விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது. —நிருபர்

---

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

---


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்

**தினசரிப் பற்று வரவு:**
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

[3575]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

The
# EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, Jan. 30, 1949 | No. 26

## இயையாப் பொருள் முடிபு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சில இலக்கியங்களைத் தெரிந்து தள்ளியிருக்கலாம். சிலப்பதிகாரத்திலும் பிற சங்கச் செய்யுட்களிலும் பண்டிதர் கைலைவத்து ஸ்ரீ வெற்றிவேற்பிள்ளை யவர்கள் கூறியதுபோலப் பழிக்கஞ்சாசுப் பான்மையேயாம். ஒரு பெண்ணை எடி கண்ணகி! என்று சொல்லிப் பாருங்கள். அவள் நெருப்பெடுக்காவிட்டால் கேளுங்கள் என்று பண்டிதர் கூறுவதை அறிஞர்கள் ஏற்கமாட்டார்கள்.

'பண்டிதர் அவர்கள் கூற்றில் புதுமை ஒன்றுமில்லை' யென்று வித்துவான் கூறிவிட்டாரென்பதை வைத்துக்கொண்டு பல பந்திகள் எழுதுகிறார் நண்பர் திரு. வ. ந. அவர்கள். பண்டிதர் அவர்களின் ஆராய்வு தொல்லாசிரியர்கள் கருத்துக்கு முரண்பட்டதென்பதை எடுத்துக்காட்டிய வித்துவானவர்கள் அவ்வாராய்வில் ஏதும் புதுமையுண்டோ வென மேலும் ஆராய்ந்து ஒரு புதுமையுமில்லையென நாட்டுகிறார்கள். அப்போது அவ்வாராய்ச்சி மரபு நிலை திரிந்த மாற்றமேயென ஒதுக்குகிறார்கள். புதுமை என்ற சொற்கருத்தை

"புதுமைபெருமைசிறுமைஆக்கமொடு மதிமை சாலா மருட்கை நான்கே"

எனவரும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்தில் வைத்து உணர்ந்துகொள்க.

'கருப்பொருளைப் பாத்திரமெனக் கற்பித்தால் —உரிப்பொருளாய ஒழுக்கத்தை மேற்கொண்ட அன்பினைந்திணைத் தலைமக்கள் எங்கு மறைந்து விட்டார்கள்' என்ற விததவானது வினவை நண்பர் வினவிவிட்டு அதற்கு அவர்தா முயன்ற விடை அவர்க்கே விளங்கியிராதென்பது எமது அபிப்பிராயம். 'களவுக் காலத்து மறையவிரும்பின் மறையலாம். அங்ஙனம் விரும்பின் கருவுள் மறையலாம்' என்கின்றார். இதனால் தலைமக்களைப் பாத்திரமென எண்ணுந் தமது கொள்கையைப் பலதரம் சுற்றியபின் தொடுகிறார்கள். தலை மக்களைக் கருவெனப் பண்டை யாசிரியர்கள் யாண்டும் கூறினாரல்லர். 'தெய்வம் உணவே' என்னுஞ் சூத்திரத்தில் 'அவ்வகை பிறவும்' என்பதனால் தலைமக்கள் பெயரும் என நச்சினார்க்கினியரும் தலைமகன் பெயர் தலைமகள்பெயர் எனக் களவியலுரைகாரரும் கூறுகின்றனர் என நண்பர் கூறுவது முழுவதுஞ்சரி. ஆனால் இப்பகுதியை நண்பர் விளங்கிக் கொள்ளாமல் எடுத்துக் கூறியிருப்பதற்கு வருந்துகிறோம். தலைமக்கள் பெயர் கருவுள அடங்கும் என்பதை யார் மறுத்தார். வெற்பன், ஊரன் முதலிய தலைமக்கள் பெயரெல்லாம் கருப்பொருள்களே. இதைக்கொண்டு அன்பின் ஐந்திணைத் தலைமக்கள் கருவுள் மறையலாம் எனக் கூறுவது வேடிக்கையாக வல்லவா இருக்கிறது. உரிப்பொருள் தலைவனைக் கருவுள் அடக்கும் நண்பர் முடிபை மரபு நிலை திரிந்த மாற்றமென்னுமல் வேறெப்படி அழைப்பது?

உரிப்பொருளை உணர்ச்சியென்பது எத்தனை மடியாகுபெயரோ அறியேம்! நண்பர் கணக்கிட்டுப் பார்த்துக் கூறுவாரா? புணர்தல், பிரிதல் என்பன உரிப்பொருள்கள். இவை உணர்ச்சியாகா என்பது சிறுமகார்க்கும் விளங்கும். ஒழுக்கம் அறம் இன்பம் என்பனவும் அடங்குதற்கு உணர்ச்சி எனக் கூறினர் என நுவலும் நண்பரே தங்கள் வாக்கைத் தங்கள் மனமும் உடன்படுகிறதா கூறுங்கள். உணர்ச்சியை ஆகுபெயர் எனக் குறிப்பிட்டிருந்தால் பண்டிதர் உரிமை உணர்ச்சியெனக் கூறியது தவறாகாது.

'இனி, அன்பினைந்திணை இலக்கியங்களில் தலைமக்கள் பெயர் கொள்ளப்படாததேன் என்பது வினா' என்கிறார் நண்பர். பண்டிதர் அன்பினைந்திணையைத் தனியாக ஆராய்ந்தாரல்லர். பண்டிதர் கருத்துப்படி மிகத்தூய இலக்கியமெதுவுமே பெயர் கூறப்படாதமைதல் வேண்டும். இவ்வித மனக்கருத்தைப் பண்டிதர் கொள்வதற்குக் காரணம் அன்பினைந்திணை சம்பந்தமான இலக்கியங்கள் சுட்டி யொருவர் பெயர் கொளப்படாமைக்குத் தாமோர் புதுமுடிபு காட்டவேண்டுமென்ற எண்ணமே யாமென்று நினைத்தார்கள் வித்துவானவர்கள். அதனால் அன்பினைந்திணையும் பெயர் சொல்லப்படாமைக்குரிய காரணம் இன்னது எனவும், ஆகவே எல்லா நல்லிலக்கியங்களையும் ஒருங்குவைத்துப் பெயர் சொல்லப்படாமைக்குப் பண்டிதர் கண்ட முடிபு பிழையானதெனவும் நாட்டினார்கள். இவ்விடத்தில் நண்பரவர்கள் வித்துவானுடைய கருத்தையேயன்றிப் பண்டிதர் கருத்தையும் ஊன்றி நோக்கவேண்டிய நிலையில் நிற்கிறார்கள். பண்டிதருடைய ஆராய்ச்சியில் இலக்கியம் முழுவதும் ஒரு சேரவைத்து ஆராயப்பட நண்பர் அன்பினைந்திணை யென்றும் பிறவென்றும் பிரித்து நோக்குவது பண்டிதர் கருத்தொடு மாறுபட்டதேயாம்.

அன்பினைந்திணை சுட்டியொருவர் பெயர் கொளாததற்கு வித்துவான் கூறுங் காரணங்கள் நச்சினார்க்கினியர் தொல்காப்பியர் என்போர் கருத்துக்களைத் தழுவியனவாம்.

'மக்கணுதலிய அகனைந்திணை' எனவும் 'பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணமென்ப' எனவும் வருதலால் தொல்காப்பியர் முதலாய பழந்தமிழாசிரியர்கள் கருத்தும் இதுவாதலறிக.

நக்கீரர் அன்பினைந்திணை உலகியலன்றெனவும் இல்லது இனியது எனப் புலவரால் நாட்டப்பட்ட ஒழுக்கமெனவுங் கூறுவர். இது பண்டிதர் கூற்றுக்கு ஆதாரமாகத் தக்கதென நண்பர் கூறுவது பொருந்தாது. மேலும்,

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்னும் சொல்லதிகாரச் சூத்திரத்துள் "மொழிகள் மெய்ப்பொருள் குறிப்பனவும் பொய்ப்பொருள் குறிப்பனவுமென இருவகைப்படும். அவற்றுள் பொய்ப்பொருள் குறிப்பனவும் (ஆகாயப்பூ, முயற்கோடு) பொருள் உணர்த்துவனவேயாம். அல்லது இல்லோன் தலைவனாக வரும் தொடர்நிலைச் செய்யுள் புலவராற் கொள்ளப்படா என்பது' எனச் சேனாவரையர் கூறுவதனாலும் பண்டிதர் கூற்று வலுவுறுகிறதாக நம்புகிறார் நண்பர். இவ்வகைத்தான தொடர் நிலைச் செய்யுட்களில் இல்லோன் தலைவனாகிறான். பண்டிதர் கூறுந் தொடர்நிலைச் செய்யுட்களில் X தலைவனாகிறான். அதாவது அப்பன் (இறைவன்) தலைவன். அம்மையும் அப்பனுந் தலைவர்களெனக் கூறும் பண்டிதர் கருத்தும் இல்லோன் தலைவனெனக் கூறும் சேனாவரையர் நக்கீரர் முதலானோர் கருத்துந் தம்முள் வேறுதலறிக. இறைவனும் இறைவியும் இல்லோர் என்ற நண்பர் வழக்கு அபத்தமே. இறைவனுக்கு உள்ளோன் (சத்து) என்பதே பெயராக அமைந்திருக்க நக்கீரர், சேனாவரையர் முதலாய கடவுட் கொள்கை முற்றிய பெருந்திருவாளர் இல்லோன் என வழங்கினர் என்று கூறுவது வரம்பு கடந்த தவறுமென்க.

தொல்காப்பியர், நச்சினார்க்கினியர், நக்கீரர், சேனாவரையர் என்போர் கருத்துக்களெல்லாந் தம்முள் முரணுதலிலவென்பது பின்னர் ஆராயப்படும். பண்டிதர் கண்டமுடிபு இவ்வெல்லா ஆசிரியர் முடிபிற்கும் புறம்பானதாதலினன்றே வித்துவான் அவர்கள் மரபு நிலைதிரிந்தமாற்றமெனப் பெயரிட்டது மென்க.

இன்னும் இவ்விலக்கியங்கள் அம்மையப்பனில் வைத்துக் கூறுகின்றனவெனில் அம்மையப்பனின் பெயர் கொடுத்துக் கூறாமல் xy இல் வைத்துக் கூற வேண்டிய அவசியம் யாதோ? புராணங்கள் பலவும் அம்மையப்பனுக்குப் பெயர் கொடுத்தே கூறிச் செல்லுகிற பொழுது புலவர்கள் சிலர் ஒரு புதுமரபு கண்டு அம்மையையும் அப்பனையும் xy இல் வைத்துக் கூறினார்களென்பது உண்மை திரிந்த மாற்றமேயாம். இறைவனுடைய பெயரும் இறைவியுடைய பெயரும் மறைபொருள்களா? பண்டிதரவர்களுடைய விடை இப்பகுதிக்கு அவசியம் தேவை.

இதுகாறுங் கூறியவற்றால் சிலப்பதிகாரம் மாசுமறுவற்ற உயர்தனிக் காப்பியமென்வும் கற்புடைப் பெண்கள் வரிசையில் முதல் நிற்கும் பேறுபெற்றவள் கண்ணகியேயாமெனவுங் கண்டேம். அகனைந்திணை இலக்கியங்கள் சுட்டியொருவர் பெயர் கொளாமைக்குப் பண்டிதர் காரணம் மரபு நிலை திரிந்த மாற்றமே யென்பது தெளிந்தாம். பண்டிதர் அவர்களுடைய இலக்கியம் என்ற கட்டுரையை மறுத்துக் கூறிய ஸ்ரீ வெற்றிவேற்பிள்ளை அவர்களதும் வித்துவான் திரு. க. வேந்தனார் அவர்களதும் கட்சி அசைக்க முடியாத வலுவுடைத்தென்பதறிந்தாம். அவற்றை மறுக்கப் புகுந்த திரு. வ. நடராசா அவர்கள் சொல்லிய நியாயங்கள் அனைத்துமே பொருந்தாவெனத் தள்ளினும்.

திரு. வ. நடராசா அவர்கள் வித்துவானுடைய கூற்றுக்களுக்கு மறுப்பெழுத நினைத்து விஷயத்தினின்றும் அதிக தூரம் விலகிச் சென்றபடியால் இவ்வளவும் எழுதவேண்டிய அவசியம் நேர்ந்தது.

இதன்மேலும் 'பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்களது கொள்கை இன்னும் ஒருவராலும் மறுக்கப்படவில்லை' என்று நினைப்பவர்கள் இவ்விஷயத்தையிட்டு நேர் நின்று விவாதித்து முடிபுகாண ஒரு பொது மேடைக்கு வருமாறு பணிவுடன் அழைக்கின்றேன்.

**குறிப்பு:**

இக்கட்டுரையுடன் குறித்த விவாதம் இப் பத்திரிகையில் முற்றுப்பெறுகின்றது. இனி, பொது மேடையில் விவாதிப்பது பற்றி எமக்கு ஆட்சேபமில்லை. ப—ர்.

## சீனம்

சீனத்தின் தலைநகரைக் காலி செய்வதெனச் சீனத்து அரசாங்கம் தீர்மானித்துவிட்டது. யாங்ஸி நதியோரத்தில் சீன அரசாங்கப் படைகள் கொம்யூனிஸ்டுகளை நன்கு தாக்குகின்றன. யாங்ஷோவையும் அரசாங்கப் படையினர் மீண்டும் கைப்பற்றி விட்டனர். ஆகவே, சீனத்தில் ஏற்படவிருந்த சமாதானப் பேச்சுகளிலே தாமதம் ஏற்பட்டுவிட்டது.




இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு திருமகள் நிலையம் நா. பொன்னையா அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1949-ம் ஆ ஜனவரி மீ 30உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org